ஔவையார் அருளிய

ஔவைக்குறள்

மூலமும்,

பன்னூலாசிரியர்: கோரக்கோட்டை

ப. வடிவேலு செட்டியார்

அவர்களால் இயற்றிய

தெளிபொருள் விளக்க உரையும்

அடங்கியுள்ளன

இந்நூல் கிடைக்குமிடம்:—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடராமய்யர் தெரு,

ஜி. டி. சென்னை.

58

உ

சிவமயம்

ஔவையார்

அருளிய

ஔவைக்குறள்

ப. வடிவேலு செட்டியாரவர்கள்

எழுதிய

ஞானதீபார்த்த உரையுடன்

வெளியிட்டோர்:

B. அரங்கசாமி நாயகரவர்கள்

ஜார்ஜ் டவுன் :: :: சென்னை.

[விலை அணா 8

திருமகள் விலாச அச்சு நிலையம்.
சென்னை—1940.

உ

கணபதி துணை

ஔவையார் சரித்திரச் சுருக்கம்

தமிழ்மணம் வீசும் மதுரைமா நகரிலே, கடைச்சங்க மிருந்த காலத்திலே, சோழவள நாட்டிலே, உறையூர் என்னும் பட்டணத்தின் ஒரு சாவடியிலே ஆதி யென்பவளுக்கும், பகவன் என்னும் அந்தண னுக்கும் ஔவையார் புத்திரியாகப் பிறந்தனர். ஆதி பகவன் என்னும் தாய் தந்தையர்களுக்குள் ஏற்பட்டிருந்த உறுதி மொழிப்படியே பிறந்த குழந்தையை விட்டு நீங்க மன மெழாது தாய் வருந்தியபோது ஔவையார் என்னும் குழந்தை சொல்லியதாவது:—

"இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ."

என்று கூறக் கேட்டத் தாய் வருத்தம் நீங்கிக் குழந்தையை விட்டகன் றனள். பின்னர் குழந்தையாகிய ஔவையாரை அடுத்தச் சேரியி லிருந்தவர்கள் எடுத்து வளர்க்க வளர்ந்து இயல்பாகவே சகல கலை களையும் அறிந்து தமிழ் நாட்டிலே கல்வியிற் சிறந்த பெண்களுள் முதன்மை பெற்றிருந்தனர்.

அக்காலத்திலிருந்த வித்வ சிரோமணிகள் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் முதலியவர்களாவர். அக்காலத்தில் கம்பர் ஒரு

பாட்டுக்கு ஆயிரம் பொன் பெற்றாலன்றி ஒருவர்மீதும் பாடுவதில்லை. ஆதலால் கம்பரைப் **பொன்னுக்குப் பாடி** யென்பர். ஔவையாரோ பசிக்கு ஒரு கை கூழிட்டால் ஒரு பாட்டுப் பாடுவார். ஆதலால் ஔவையாரைக் **கூழுக்குப் பாடி** யென்பர்.

ஒரு சமயம் **சிலம்பி** யென்னும் தாசி கம்பரிடஞ் சென்று தன் மீது ஒரு பாட்டுப் பாடும்படிக் கேட்டனள். அதற்குக் கம்பர் ஆயிரம் பொன் கேட்டனர். அவளிடம் ஐந்நூறு பொன்னே இருந்தமையால் அதனைக் கொடுத்துப் பாடும்படி வேண்டினள். நீ ஆயிரம் பொன்னுக்கு ஐந்நூறு பொன்னே கொடுத்தபடியால் அரைப்பாட்டுத்தான் பாடுவே னென்று,—

“தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுசோழ மண்டலமே.........”

என்றிந்த இரண்டடியைத் தாசி வீட்டுச் சுவற்றி லெழுதிவிட்டுப் போயினர். அது கண்டு தாசி கையிலுள்ள பொன்னும் போய், பாட்டும் பூர்த்தியாகாமல் வறுமையுற்று மனம் வருந்தினள். அப்போது ஒரு நாள் ஔவையார் பசியால் வருந்தி அத் தாசி வீட்டுக்குச் சென்று “பசியால் வருந்துகின்றேன்; கொஞ்சங் கூழேனுந் தருவாயா?” என்றனர். அது கேட்ட தாசி வீட்டினுட் சென்று தனக்கு வைத்திருந்த கூழைக் கொண்டுவந்து கொடுத்து உபசரித்தாள். ஔவையார் அக் கூழை யுண்டு களைதீர்ந்த பிற்பாடு சுவற்றில் எழுதி யிருந்த பாட்டைப் பார்த்துத் தாசியை நோக்கி, “அம்மே! ஈதென்னே?” என, தாசி அதன் விருத்தாந்தத்தைச் சொல்லக்கேட்ட ஔவையார்,—

........................“பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.”

எனப் பாடி முடித்தனர். அதனால் தாசிக்குச் செல்வம் பெருகிச் சுகமாக வாழ்ந்தாள். இச் செய்தியைக் கேள்விப்பட்ட கம்பர், ஔவையார்மீது சீற்றங்கொண்டு பல சந்தர்ப்பங்களில் இருவருக்கும் வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. இதன்றியும், ஔவையார் பற்பல சந்தர்ப்பங்களில் அற்புதமான செயல்களைச் செய்தும், பாடல்களைப் பாடியுமுள்ளார். ஈண்டு அவற்றை விரிப்பிற் பெருகுமாதலின் இத்துடன் முடிக்கின்றனம். விரிவை **விநோதரச மஞ்சரி, தனிப்பாடற் றிரட்டு** முதலிய நூல்களில் காண்க.

விஷய அட்டவணை

1. வீட்டு நெறிப்பால்

2., திருவருட்பால்

3. தன்பால்

உ

சிவமயம்

ஔவையார்

அருளிய

ஔவைக்குறள் மூலமும்

ஞானதீபார்த்த உரையும்

முதலாவது

வீட்டுநெறிப்பால்

1. பிறப்பின் நிலைமை

1. ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்.

உரை:—நமது சரீரத்திற்கு முதன்மையாய் நின்ற அறிவானது முதலெழுத்தாகிய பிரணவத்தைச் சொல்லிய வேதத்தின் பிரயோசனமே இங்கு எனக்கு இதைச் சொல்ல இடங்கொடுத்தது.

கருத்து:—பிரணவத்தைச் சொல்லிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின் பயனே ஆதியாகிய என் அறிவால் சொல்லுகிறேன்.

விசேஷம்:—ஆன்மா தனது வினையினளவுக்குத் தக வேறோர் சரீரமெடுப்பதற்குக் காரணமா யிருப்பதால்,

'ஆதியாய் நின்ற அறிவு' எனவும், வேதங்களுக்கு ஆதியில் உச்சரிப்பது பிரணவமாகியதால் 'முதலெழுத்' தெனவும், அந்த வேதத்தையே சொல்லுவது இந்நூலென்பதால் 'ஓதிய நூலின் பயன்' எனவுங் கூறினர்.

அறிவே ஆன்மா, ஆன்மாவே அறிவாகும்.

எல்லா எழுத்திற்கும் 'அகரம்' என்ற எழுத்து முதலாக உடையதுபோல, உலகிற்கு முதன்மையாய் இருக்கப்பட்டவர் 'கடவுள்' என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளுக்கு முதற் பாவாகவும், கடவுள் வாழ்த்தாகவும், மங்கலச் செய்யுளாகவும் கூறியது போன்று, ஔவையாரும் பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் பஞ்சபூத சரீரத்திற்கு ஆதிகாரணம் அறிவென்றும், வேதங்களுக்கு ஆதியாய் உச்சரிக்கப் பட்டது பிரணவமாகிய முதலெழுத்தென்றுங் கூறினர். அன்றியும், "அறிவான தெய்வமே..........." என்று தாயுமானவர் கூறியதற்கேற்ப அறிவே தெய்வமாதலின், கடவுள் வாழ்த்தாகவும் இம் முதற் குறளைக் கூறினர் எனினும் பொருந்தும்.

ஔவை வள்ளுவர் முதலாய எழுவருக்கும், தாய் தந்தை ஆதியும் பகவனுமாகையால், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதற்கேற்ப, நாயனர் "ஆதிபகவன்" என்றும், ஔவையார் "ஆதி" யென்றும் முதற் செய்யுளில் கூறியதாலும், தாய்தந்தை இருவரை முன்னிட்டே சரீரமாகிய உலகைப்பெற்றுப் பூவுலகில் வந்து

முன்னவனை யறிவதாலும், தாய்தந்தையை வணங்கினு ரெனினும் ஒக்கும். ஔவை பெண்பாலாகையால் தாயை மட்டும் வணங்கினு ளாகும். தாயைக்கொண்டே தந்தையை அறியவேண்டு மாகையால் மாதாவே விசேடமாகும். 'ஆதியாய்' என்றதால் தந்தையையும் குறிப்பதாகும்.

2. பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
 தரமாறிற் றோன்றும் பிறப்பு.

உரை:—பரம்பொருளிடத்தில் உண்டான பராசத்தி யுள் அடங்கிய ஐந்துபூதங்களும் ஒன்றுடனொன்று மாறி னால் பிறப்பெனும் ஜென்மமானது தோன்றும்.

கருத்து:—ஐந்து பெரிய பூதங்களின் பரிணமமே தேக மாகும்.

விசேஷம்:—பாதத்திலிருந்து மாயையுண்டாகி, மாயையி லிருந்து சத்தி (வல்லமை) யுண்டாகியதால் 'பரமாய சத்தி' என்று கொள்ளலுமாம். மாயையின் சக்திக்கு 'மாயா சத்தி' என்பதாம். பராசத்தியி னிகழ்வதே மாயாசத்தி யாகையால் 'பரமாய சத்தி' என்றார்.

மாயாசத்தியி னிடமாகவே பஞ்சபூதந் தோன்றி தேக மாவதால் 'சத்தியுள்' என்றார்.

3. ஓசை பரிச முருவஞ் சுவைநாற்றம்
 ஆசை படுத்து மளறு.

உரை:—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய புலன்கள் ஐந்தும் ஆசையை உண்டாக்குகின்ற சேறாகும்.

கருத்து:—புலனாகிய தன்மாத்திரை ஐந்தும் ஆசையை யுண்டாக்கி ஆன்மாவாகிய அறிவைக் கெடுப்பவைகளாகும்.

விசேஷம்:—நினைத்து, விசாரித்து, அதனைக்கொண்டு மென்மேலு மெழுப்புவதாகிய அகங்கார தமோகுணத்தில் உற்பவமாகிய ஐம்புலனாகிய தாகையால் 'ஆசைப்படுத்துமளறு' என்று கூறினார். புலனைந்தும் உயிர்க் கூறாகிய தால் உயிராகிய அறிவைக் கெடுப்பதாகும். அளறு-சேறு.

சத்தம்:—கேட்கப்பட்டது; செவிக்குயிர்க்கூறு.

பரிசம்:—சீதோஷ்ணதியறிவு; (தோல்) உடம்புக் குயிர்க்கூறு.

உருவம்:—காணப்பட்டது; கண்ணுக்குயிர்க்கூறு.

இரசம்:—அறுசுவையறிவு; நாவுக்குயிர்க்கூறு.

கந்தம்:—நற்கந்த துர்க்கந்தவறிவு; நாசிக்குயிர்க்கூறு.

4. தருமம் பொருள்காமம் வீடெனு நான்கும்
உருவத்தா லாய பயன்.

உரை:—அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும், சரீரத்தாலுண்டான பிரயோஜனமாம்.

கருத்து:—நான்கு புருஷார்த்தங்களும் சரீரத்தாலுண்டான பயனாகும்.

விசேஷம்:—இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத புருஷார்த்தங்கள் நான்கும், ஆறறிவுடைய மானி

டர்க்கே யுரியதாதலால், அவை நான்கும் 'உருவத்தா லாய பயன்' என்றார். அவ்வுருவம் மானிட உருவத்திற்கே யன்றி, ஏனைய உருவத்திற்கன்று;

தருமம் என்பது முப்பத்திரண்டே யன்றி,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை"

என நாயனார் கூறியது கொண்டு பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசியாகிய மூவர்களுக்கும் இல்லறத்திலிருப்போன் செய்யவேண்டிய தருமம் எனினும் ஒக்கும்.

தருமம் பொருளுள்ளோர்களே செய்தற்கியலும்; மற்றோர்க்குச் செய்ய வியலாதெனலாம்; அற்றன்று; பொருளிருக்கின் அப்பொருள் நல்வழியிற் சம்பாதித்ததாக இருக்கவேண்டியதோடு, திரிகரண சுத்தியோடு நல்வழியில் செய்யவேண்டும்; பொருளில்லையேல் சரீரத்தால் ஆகவேண்டிய தருமங்களைச் செய்யவேண்டும்; அப்படி செய்வதற்கு இயலாதாயின், தருமம் செய்யவேண்டும் என்ற ஓர் ஆசை மனத்தினிடமாக இருக்கவேண்டும்; அப்படிக்கின்றி தீயவழிகளில் காலபேதத்திற் கிணங்கியும், படாடோபத்திற் கேற்றும் செய்யும் தருமங்கள், சுத்தத்திற்காக ஸ்நானஞ்செய்து, சேற்றை மேல்பூசிக் கொண்டதுபோலாகும்.

பொருள் என்பது கல்விப்பொருள் செல்வப்பொருள் என இருவகைப்படும். இரண்டனுள்,

"பொருளிலார்க் கிவ்வுலக மில்லை"

என்பதனுல் செல்வப்பொருளே யீண்டு ஆவசியமாம். கல்விப்பொருளுக்கும், அறம், இன்பம், வீடு என்னும் மூன்றிற்கும் காரண காரியமாகவும் இருப்பது செல்வப்பொருளேயாம். ஆனதினுல், "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றுங் கூறியுளார்.

இன்பம் என்பது இச்சை, ஆசை என்பதாகும். இன்பத்தால் துன்பமும், இச்சையால் லச்சையும், ஆசையால் மோசமும் அடைவது உலக இயற்கையாம். ஆகையால் நல்லின்பத்தை யனுபவிப்பதே புருஷார்த்தத்திற்கு லக்ஷணமாகும்.

வீடு என்பது மேற்கூறிய இம்மை போகபாக்கியமாகிய அறம் பொருள் இன்பம் மூன்றையுங் கடந்து மறுமை போகபாக்கியமாகிய மோட்சத்தை யடைவதாம். இனி, 'வீடு' என்பதற்கு 'விடுதலே' என்று பொருளாம். விடுதலேயாவது பந்தங்களினின்று விடுபடுதலாதலின், பந்த மென்பது ஒன்றுண்டென்பதும், அப் பந்தமுண்டாகவே அதினின்றும் விடுபடவேண்டுமென்பதும் சகலாகம சம்மதமாம் என்க. "வீடென்றறைதரு சொற்குப்பொருளோ விடுதலேயாதலினுல்,..........." என்று அருளிய சிதம்பர சுவாமிகள் திருவாக்கும் ஈண்டு ஆராயத்தக்க தொன்றும்.

5. நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே
உலவையிரண் டொன்று விண்.

உரை:—பிருதிவு பூதமானது ஐந்தாவதாகவும், அப்பு பூதமானது நான்காவதாகவும், தேயு பூதமானது மூன்றுவ

தாகவும், வாயு பூதமானது இரண்டாவதாகவும், ஆகாய பூதமானது முதலாவதாகவு மாகும்.

கருத்து:—பஞ்சபூதங்களும் அளவையில் மேற்கூறிய வரிசைக்கிரம எண்களை யடையும்.

விசேஷம்:—பிருதிவு முதலாக ஆகாயமீறாகக் கூறினும் வரிசைக் கிரமங்களால் ஆகாயம் முதலாக பிருதிவி யீறாக மேற்சொன்ன எண்களை யுடையன வென்றார்.

பிருதிவு - மண்; அப்பு - நீர்; தேயு - அக்கினி; வாயு - காற்று; ஆகாயம் - சுத்தவெளி; இவைகளே பஞ்சபூத மாகும்.

6. மாயன் பிரம னுருத்திரன் மகேசனோ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்து.

உரை:—விஷ்ணுவும், பிரமனும், உருத்திரனும், மகேசனும், சுருதியிலாயும் சதாசிவனுமாகிய பஞ்சமூர்த்தங்களாம்.

கருத்து:—மூர்த்திகள் ஐவர். இவர்களே பஞ்சமூர்த்திக ளாகும்.

7. மாலய னங்கி யிரவி மதியுமையோ
டேழுந் திகழ்சத்தி யாறு.

உரை:—பொருந்தி விளங்குகின்ற சத்திகள், விஷ்ணு, பிரமன், அக்கினி, சூரியன், சந்திரன், உமை ஆக அறுவ ராகும்.

கருத்து:—சத்திகள் ஆறு என்று விளங்குகின்றது.

8. தொக்குதிரத் தோடுன் மூளை நிணமென்பு
சுக்கிலந் தாதுக ளேழு.

உரை:—சரீரம், இரத்தம், மாமிசம், மூளை, நிணம் எலும்பு, சுக்கிலம் ஆக தாதுக்கள் எழாகும்.

கருத்து:—சப்த தாதுக்களை விளக்குகின்றது.

குறிப்பு:—தொக்கு + உதிரம் = தொக்குதிரம் எனப் புணர்ந்தது. தொக்கு - தோல், சரீரம்; உதிரம்-இரத்தம்; ஊன்-மாமிசம்; நிணம்-கொழுப்பு; என்பு-எலும்பு.

9. மண்ணொடுநீ ரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு.

உரை:—மண், ஜலம், அக்கினி, சந்திரன், காற்று, சூரியன், ஆகாயம், யாகதேவதை ஆக எட்டும், அஷ்ட மூர்த்தங்களாவார்.

கருத்து:—இவர்கள் எண்மரும் அஷ்டமூர்த்தங்களாவர் என்பது.

விசேஷம்:—இதனை மாணிக்கவாசகர்,

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்"
என்றார்.

குறிப்பு:—அங்கி-அக்கினி; மதி-சந்திரன்; இரவி-சூரியன்; விண்-ஆகாயம்.

10. இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது விந்து.

உரை:—மேலே சொல்லப்பட்ட இவைகளெல்லாம் சேர்ந்து சரீரமான ஒன்றின் குற்றங்களெல்லாம் உண்டானது சுக்கிலத்தாலானதாகும்.

கருத்து:—விந்துவின் காரணத்தால் பஞ்சபூதங்களும், பஞ்சதன் மாத்திரைகளும், நான்கு புருஷார்த்தங்களும், பஞ்சமூர்த்திகளும், ஆறு சத்திகளும், எழு தாதுக்களும், எட்டு மூர்த்தங்களும், ஆகிய இவையெல்லாங்கூடி சரீரமுண்டானது என்பதாம்.

பிறப்பின் நிலைமை முற்றிற்று.

ஆக செய்யுள் 10.

---

2. உடம்பின் பயன்

1. உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்.

உரை:—சரீரத்தைப்பெற்ற பிரயோஜன மாவதெல்லாம் சரீரத்திலுள்ள உத்தமனென்னும் ஈஸ்வரனை அறிவதற்காகும்.

கருத்து:—சரீரத்தைப்பெற்ற பிரயோஜனமானது சரீரத்தினுள்ளே விளங்கும் கடவுளைத் தரிசிப்பதற்கே யாம்.

விசேஷம்:—ஜீவான்மாக்களிடத்தில் சர்வேஸ்வரன் வியாபித்திருப்பதால், அவனை யறிவதே எடுத்த சரீரத்திற்கு லக்ஷணமாகும். அதனால் 'உடம்பினி லுத்தமனைக் காண்' என்றார். இதனைப் பிறரும்,

'தன்னையும் தனக்காதார தலைவனையுங் கண்டாயேல்' என்றுங் கூறியதனு லறிக.

2. உணர்வாவ தெல்லா முடம்பின் பயனே
யுணர்க வுணர்வுடை யார்.

உரை:—உணர்ச்சியாகும்படியான யாவும் சரீரத்தின் பயனாகும். அதை நல்ல உணர்ச்சியுடையவர்கள் தெரிந்துக்கொள்ளக் கடவர்.

கருத்து:—சரீரங்களின் பயனே ஆன்மாக்களுக் குண்டாகும் உணர்ச்சியாம். ஆனதால் உணர்வுடையோர் உணரவேண்டியதாம்.

விசேஷம்:—'உணர்க உணர்வுடையார்' என்பது, உணர்ச்சி யுடையோர்களே அறிவுடையோர்களாகும்; அறிவுடையோர்களே அதை அறியக்கடவர் என்பதாகும். சரீரத்தின் உணர்ச்சியே ஆன்மா அடையும்.

3. ஒருபய னவ துடம்பின் பயனே
தருபயனுஞ் சங்கரனைச் சார்.

உரை:—நமக்கு ஒப்பற்ற பிரயோஜனமாவது சரீரத்தினது பயனேயாகும். அந்த பிரயோஜனத்தைக் கொடுக்கும்படியான சிவபெருமானை அடைதலாம்.

கருத்து:—சரீரத்தின் பிரயோஜனமாவது சிவபெருமானைச் சேர்தலாகும்.

விசேஷம்:—நமது சரீரத்தின் பிரயோஜனம் சிவபெருமானை யடைதலால், சிவபெருமானையே நாம் அடைதல் வேண்டும்.

ஒருபயன் என்பது ஒப்பற்றபயனும். ஒப்பற்றபயனை நாம் ஆவசியம் அடையவேண்டு மாதலால் 'ஒருபயன்' என்றார். மேலும், 'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம், உடம்பினி லுத்தமனைக் காண்' என்று மேற்கூறியதும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

4. பிறப்பினாற் பெற்ற பயனாவ தெல்லாந்
துறப்பதாந் தூநெறிக்கட் சென்று.

உரை:—ஜன்மத்தினால் பெறப்பெற்ற பிரயோஜனங்களெல்லாம் உயர்ந்த பரிசுத்தமாகிய மார்க்கத்திற்போய் சகல இன்பங்களையும் விட்டொழிவதாகும்.

கருத்து:—சகல இன்பங்களையுந் துறப்பதே பிறவியெடுத்ததின் பயனாகும்.

விசேஷம்:—"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிதுகாண், இப்பிறவி தப்பினாலெப்பிறவி வாய்க்குமோ யேதுவருமோ அறிகிலேன்" என்று மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவர் கூறியதற்கேற்ப, சர்வ பிறவிகளிலும் விசேஷப்பட்டதாகிய இந்த மானிடப் பிறவியிலேயே சிவபெருமானை யடையவேண்டும். அதன் பொருட்டே தீநெறியைத் துறந்து தூநெறியை (பரிசுத்தமான வழியை) அடைய வேண்டும்; தீநெறி

யுள்ளளவும் தூநெறி யடையப்படாததால் இரண்டையுங் கூறினர்.

5. உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை
யுடம்பினா லுன்னியதே யாம்.

உரை:—சரீரத்தினாலன்றி உணர்ச்சியாவ துண்டாவ தில்லை. ஆகையால், உடம்பினால் நினைக்கப்பட்டதே யாகும்.

கருத்து:—சரீரத்தினால் உணர்ச்சி யுண்டாவதே யல்லாமல் மற்றதினால் உண்டாவ தில்லை.

விசேஷம்:—உண்டாகும் உணர்ச்சியானது சரீரத்தினால் உண்டாவது நினைக்கப்பட்டதே என்பதினால் 'உடம்பினா லுன்னியதே யாம்' என்றார்.

6. மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு.

உரை:—குற்றமற்ற குணமானது மனத்தில் உண்டானால், சரீரமானது சர்வேஸ்வரனை உணர்விக்கும்.

கருத்து:—சரீரமானது மனத்திலுள்ள குற்றமகன்றவுடன் ஈசனைக் காட்டும்.

விசேஷம்:—உடம்பு மாயையில் கட்டுப்பட்டிருப்பதால் அதனுள்ளடங்கிய மனமானது சீக்கிரத்தில் பரிசுத்த மடையாது. அவ்வாறு அடையில் அந்தச் சரீரத்தால் சீக்கிரத்தில் கடவுளைக் காணலாகும்.

7. ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தா லாய வுடம்பு.

உரை:—ஸ்திரீ புருஷர்களது நேசத்தினாலேயான சரீர மானது சத்தம் முதலிய உணர்ச்சிகளெல்லாம் உண் டாக்கும்.

கருத்து:—சரீரத்தின் தத்துவ அளவுப்படியே அறிவும் ஸ்திரீபுருஷ விருப்பத்தால் உடம்பும் தருவிக்கும்.

ஓசை என்றது, சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என ஐந்தாகும்.

8. உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு.

உரை:—ஆன்மாவுக்கு உறுதியைத் தருவதெல்லாம் சரீரத்தின் பிரயோஜனமேயாம். ஆகையால், சங்கையின்றி முதல்வனாகிய கடவுளை விரும்பு.

கருத்து:—உயிர்க்கு உறுதியைச் சரீரமானது தருவ தால் அதையே ஆதாரமாகக்கொண்டு சிவபெருமானை யடைய விரும்பு.

விசேஷம்:—"உடலை வளர்த்தான் உயிர் வளர்த்தானே" என்பதைப் போன்று, உடலில்லை யாயின் உயிர்க்குறுதி தேட இயலாதாகையால், அதைக்கொண்டு கடவுளை நாட வேண்டுமென்றார்.

9. உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு.

உரை:—சரீரத்தைப்பெற்ற எல்லா பிரயோஜனங்களும் உறுதியாக உள்ளே ஈசனை ஆராய்வதாகும்.

கருத்து:—சரீரம் உண்டானதின் பிரயோஜனம் கடவுளைத் தேடி அறியவேண்டும்.

விசேஷம்:—எப்பிறவிகளிலும் உயர்ந்ததாகிய மானிடப் பிறவியை அடைந்தவர்கள் கடவுளை யடையவேண்டியது கடமையாகும்.

10. அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும்.

உரை:—அன்னசத்துவால் உண்டான சரீரத்தின் பிரயோஜனமெல்லாம் முதல்வனாகிய கடவுளைக் காட்டிவிக்கும்.

கருத்து:—சரீரத்தின் பிரயோஜனமாவது சர்வேஸ்வரனைக் காட்டிவைக்கும்.

விசேஷம்:—"அன்னத்தா லறைந்திட்ட வீடு, அன்ன மொடுங்கினா லதுவே சுடுகாடு" என்பதனால் அன்னத்தினாலேயே சரீரமிருக்கும்; சரீரத்தினாலே ஆன்மாவிருக்கும்; ஆன்மாவுக்குச் சரீரமின்றிக் கடவுளைக் காண வியலாது; ஆனதால், அன்னமய சரீரமே கடவுளைக் காட்டிவிடும் என்றார்.

உடம்பின் பயன் முற்றிற்று.
ஆக செய்யுள் 20.

---

3. உள்ளுடம்பின் நிலைமை

1. கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலாம்
உற்றுடம்பா லாய வுணர்வு.

உரை:—பொருந்திய உள்ளுடம்பினால் உண்டான அறிவானது கற்பதற்கும், கேட்பதற்கும், கண்கள் நிறம்ப காண்பதற்கு மாகும்.

கருத்து:—உள்ளுடம்பின் உணர்ச்சியால் கற்க, கேட்க, கண்ணாரக் காண முதலிய சர்வகாரியங்களுடைய அனுகூலமாகும்.

விசேஷம்:—உள்ளுடம்பென்னும் சூக்குமதேகமாகிய தத்துவதேகமானது ஆன்மாவுக் குண்டாக்கியதால், கற்கலாங் கேட்கலாங் காணலாம். இல்லையாயின் எக்காரியமும் நடவாதாகும்.

2. வெள்ளிபொன் மேனிய தொக்கும் வினை
உள்ளுடம்பி னுய வொளி. [யுடைய

உரை:—வினையினு லுண்டான சூட்சுமதேகத்தின் பிரகாசமானது வெள்ளி பொன்னின் சொரூபத்தை ஒப்பாகும்.

கருத்து:—சூட்சுமதேகத்தின் பிரகாசமானது வெண்மை நிறமும் பொன்மை நிறமும்போல விளங்கும்.

விசேஷம்:—சரீரத்தினுள்ளிருக்கும் சூட்சும பிரகாசமானது உற்று நோக்கில் வெண்மை பொன்மை நிறமாகத் தோன்றும் என்றார். இதனை,—

"ஆணிப்பொன் னம்பலத்தே கண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி—அம்மா
அற்புதக் காட்சியடி." என்பதனு லறிக

3. சென்றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்
பென்றுங் கெடாத திது.

உரை:—இந்த சூட்சும சரீரமானது வெளியே சென்று வேண்டுவன புசித்துத் திரும்பிவந்து திரியும். அது எஞ்ஞான்றும் அழிவுபடாததாகும்.

கருத்து:—உள்ளுடம்பானது சகல காரியங்களுக்கும் வெளியேகி முடித்துப் பழயபடியே வந்து இயங்குவதால் என்றும் அழியாததாகும்.

விசேஷம்:—தூலசரீரமின்றி சூட்சும சரீரம் இல்லை; தூலசரீரம் பகிர்முக விஷயாதிகளைச் செய்யும்; சூட்சும சரீரமானது அந்தர்முக விஷயாதிகளைச் செய்யும்; அது செய்யும் விஷயாதிகள் தன்னையன்றிப் பிறர்க்குத் தெரிய மாட்டாது. இதுவே மனோவியாபாரம்; ஆனதால் இதனை 'உள்ளுடம்பு' என்றார்.

4 வருபய னுண்டு மகிழ்ந்துடனா நிற்கும்
ஒருபயனைக் காட்டு முடம்பு.

உரை:—உண்டாகின்ற பிரயோஜனத்தை அனுபவித்து மகிழ்ந்து ஸ்தூலசரீரத்துடன் கலந்திருக்கின்ற சூக்குமசரீரமானது ஒப்பற்ற பிரயோஜனத்தைக் காட்டும்.

கருத்து:—உள்ளுடம்பு வெளியுடம்புடன் கலந்து சர்வ பிரயோஜனங்களையும் உணர்த்துவிக்கும்.

விசேஷம்:—தூலசரீரத்திற்கு உடனாயிருக்கும் சூட்சும சரீரமானது விஷயாதிகளின் பிரயோஜனத்தை அநுபவித்

தும் மகிழ்ந்தும் முடிவில் ஒப்பற்ற பிரயோஜனத்தைக் காட்டும்.

'ஒருபயன்' என்பது நிகரற்ற பிரயோஜனம். அதாவது தனக்கு ஆதாரமாகிய தலைவன் என்னும் சிவபெருமான் எனினும் ஒக்கும்.

5. அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு.

உரை:—ஆராய்ந்து உண்டான பழமையாகிய உடம்பின் தொடர்ச்சியானது துன்பத்தை உண்டாக்குகின்ற ஜென்மத்தை யகற்றுவிக்கும்.

கருத்து:—சூட்சும தேகமானது பிறவியை அகற்றும்.

விசேஷம்:—உள்ளே பிரகாசிக்கும் சரீரமானது தன் உணர்வினால் துன்பத்தி லீடுபடும் பிறவியை ஒழிக்கும் என்றார்.

6. நல்வினையுந் தீவினையு மூண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு.

உரை:—சூக்கும சரீரமானது நல்ல வினைகளையும் தீய வினைகளையும் அநுபவித்துத் திரியும். மற்ற உயிர்களால் செய்யும் இருவினைகட்கும் காரணமாகும்.

கருத்து:—சூக்கும சரீரமானது தானனுபவிக்கும் இருவினைகளுக்கும், பிறவுயிர்கள் செய்யும் இருவினைகளுக்கும் காரணமாகும்.

விசேஷம்:—செய்யும் இருவினைக ளெல்லாவற்றிற்கும்

சூக்குமதேகமே வித்தாகு மென்பதால், ஸ்தூல சரீரத்தி ஞல் பயனில்லை யென்பதாகும். உள்ளுடம்பு கருதாத வெளியுடம்பு எது ஒன்றையும் செய்யாது என்பதால் இரண்டிற்கும் காரணம் உள்ளுடம்பே யாகும்.

7. உள்ளுடம்பின் வாழ்வன வொன்பது மேழை
கள்ளவுடம் பாகி விடும். [க்

உரை:—சூக்கும சரீரத்தில் வாழ்வனவாகிய ஒன்பது துவாரங்களும் உயிர்களுக்குத் திருட்டுச் சரீரமாகிவிடும்.

கருத்து:—சூக்குமதேகமானது நவத்துவாரங்களோடு கலந்து வாழப்பட்டதாகும்.

விசேஷம்:—இரு உடம்பிற் கிடையாய நவத்துவாரங் கள் கூடியதேயாம். வெளிக்கும் உள்ளுக்கும் உள்ள சரீ ரத்திற்குச் செய்யும் விஷயாதிகளில் கூடி நல்லவை செய்யுங் கால் நல்லுடம்பாக்கும். ஈண்டு நல்லவையேற்று தீயவை விலக்குவதால், தீயவை முன்னிட்டு 'கள்ளவுடம் பாகி விடும்' என்ருர்.

8. பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற்கோர் வித்
மெய்க்குள்ளா மாய வுடம்பு. [தாகு

உரை:—ஸ்தூல சரீரத்திற்கு உள்ளே யிருக்கப்பட்ட சூக்கும சரீரமானது எல்லாபொய்க்கும் ஆதாரமாயிருக் கின்ற சரீரத்திற்கு ஓர் விதையாகும்.

கருத்து:—சூக்குமசரீரமே பொய்யாகிய ஸ்தூலசரீரத் திற்கு ஆதாரமாகும்.

விசேஷம்:—பொய்யாகிய ஸ்தூல சரீர மென்றபோது மெய்யாகிய சூக்கும சரீர மென்பதாகும். சூக்குமம் அழியாததால் மெய்யென்றார்.

"தேகமானபொய்யை மெய்யெனக்கருதி
யையவையமிசை வாடவோ" என்பதினு லறிக.

ஸ்தூல சரீரமானது சூக்கும சரீரமில்லாது வழிநிலையாதாகையால் 'வித்தாகு மெய்க்குள்ளா மாய வுடம்பு' என்றார்.

9. வாயுவினு லாய வுடம்பின் பயனே
ஆயுவி னெல்லை யது.

உரை:—பிராணவாயுவினுல் உண்டான தேகத்தினது பிரயோசனமாவது ஆயுளின் அளவை யுடையதாகும்.

கருத்து:—பிராணவாயுவானது விந்துவில் எவ்வளவு அளவை கலந்து கருப்பையில் பாய்ந்து பொதிகின்றதோ அவ்வளவு கால அளவே ஆயுள் அளவையாகும்.

விசேஷம்:—பிராணவாயு விந்துடன் கலந்து பாயும் போது எவ்வளவு அளவை இயங்கி பொருந்துமோ அவ்வளவு கால அளவே ஆயுள் ஆகும் என்றதனுல், அதனோடு இயங்கிப் பொருந்தாவிடில் கருவில்லையாம். பூரண அளவு எற்படில் வயது நூற்றியிருபதென்றும், அதில் எவ்வளவு குறையுமோ அவ்வளவே ஆயுள் குறையுமென்பது கருவுரு சாஸ்திரம். இந்த அளவு முதலியவை யறிவது சரீரநூல் உணர்ந்தோர்க்கேயன்றி மற்றவர்களுக்கு விளங்காது.

10. ஒன்பது வாசலு மொக்க வடைத்தக்கால்
அன்பதி லொன்று மரன்.

உரை:—நவத்துவாரங்களையும் ஒருப்பட அடைத்தக்கால் அன்பில் சிவபெருமான் சேர்தலாகும்.

கருத்து:—நவத்துவாரங்களை யடைத்து யோகம் செய்வோர் அன்பில் சிவபெருமான் கலந்திருப்பான்.

விசேஷம்:—யோகசாதன முடையோரே நவத்துவாரங்களில் வாயு (காற்றுப்) போகாமல் அடைக்க சக்தியுடையோராவர். அவ்வாறு அடைத்து யோகஞ்செய்வோர்களுக்கு அன்பில் சிவன் கலந்து தனிநிலை யடையலாம்.

அன்பில் சிவம் என்றதை,

"அன்பு சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே,"

என்னுந் திருமந்திரத்தா னறிக.

உள்ளுடம்பின் நிலைமை முற்றிற்று.

ஆக செய்யுள் 30.

---

4. நாடி தாரணை

1. எழுபத்தி ராயிர நாடி யவற்றுள்
முழுபத்து நாடி முதல்.

உரை:—சரீரத்திற்கு எழுபத்தீராயிர நாடி என்று சொல்லப்பட்ட தொகையில் முதன்மையாகிய நாடிகள் பத்தேயாம்.

கருத்து:—எழுபத்தீராயிர நாடிகளில் பத்து நாடிகளே முதன்மையாகும்.

விசேஷம்:—சரீரமானது எழுபத்திரண்டாயிர நாடிகளால் கட்டப்பட்டது. அந்நாடிகள் மாறி மாறி சூரியனது கிரணங்களைப்போல் கலந்து விளங்கும். விளங்கினும் அவைகளில் "அத்தி, அலம்புடை, இடை, காந்தாரி, குரு, சங்கினி, சிகுவை, சுழிமுனை, பிங்கலை, புருடன்" என்னும் தசநாடிகளே முதன்மையாகும் என்றார்.

2. நாம்பெனு நாடி யிவையினுக் கெல்லாம்
உரம்பெறு நாடியொன் றுண்டு.

உரை:—நரம்பென்று சொல்லப்பட்ட நாடியாகிய இவைகளுக்கெல்லாம் பலம்பொருந்திய நாடி ஒன்று இருக்கின்றது.

கருத்து:—எல்லா நாடிகளுக்கும் ஆதாரமான நாடி ஒன்றிருக்கின்றது.

விசேஷம்:—சரீரத்திற்குக் கட்டப்பட்ட நாடிகள் எழுபத்திராயிரமும், அவைகளுக்கு முதன்மையாகியது பத்தும், அதிலும் முக்கியமானது ஒன்றும் என்றது சர்வ நாடிகளுக்கு ஆதாரமான நாடி ஒன்றேயென்றும் கூறினார்.

3. உந்தி முதலா யுறுமுடிகீழ் மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து.

உரை:—தொப்பூழ் முதலாக பொருந்தி சிரசுவரைக்கும் கீழு மேலுமாக விரும்பி பந்தித்திருக்கும்.

கருத்து:—நாடியானது உந்திமுதல் சிரசுவரை யுயரக் கட்டுப்பட்டிருக்கிறது.

விசேஷம்:—எழுபத்திரண்டாயிரம் நாடி எனும் நரம்பானது நமது ஒவ்வொரு சரீரத்திற்கும் ஆதாரமானதால் அவைகட்கு இருப்பிடம் உந்தியே. அங்கெழுந்து இடம் வலமாக, வலம் இடமாகப் பின்னி நிற்கும்.

நமது சரீரத்தைக் காப்பாற்றுதற்கு முக்கிய ஸ்தானம் உந்தியே யாகையால் 'உந்திமுதல்' என்றார்.

4. காலொடு கையி னடுவிடைத் தாமரை
நூல்போலு நாடி நுழைந்து.

உரை:—நரம்பானது கால்களிடத்தும், கைகளிடத்தும், நடுவிடங்களிலும் தாமரை நூல்போல கலந்திருக்கும்.

கருத்து:—நரம்பானது தாமரை நூல்போல கால், கை, நடுமுதலிய விடங்களிற் கலந்திருக்கிறது.

விசேஷம்:—நரம்பானது சரீரத்தில் முழுதும் கலந்திருப்பது பற்றி 'காலொடு கை' என்றும், காலிலிருந்து சிரசளவும் எங்கும் தாமரை நூல்போல் பரவி பின்னியிருப்பதால் 'நடு இடை' என்றுங் கூறினர்.

5. ஆதித்தன் றன்கதிர் போலவந் நாடிகள்
பேதித்துத் தாம்பரந்த வாறு.

உரை:—அந்த நரம்புகள் சூரியனுடைய கிரணங்களைப் போல பேதித்து அவைகள் கலந்த விதமாகும்.

கருத்து:—நமது உடம்பில் எழுபத்திரண்டாயிர நரம்புகளும் சூரியன் கதிர்போல மாறி மாறி பரவி கலந்திருக்கும்.

விசேஷம்:—'பேதித்து' என்றது நரம்புகள் கத்திரிக்கோல் மாறல்போல வலம் இடமாக மாறி யிருப்பதே யாகும்.

'தாம்பரந்த வாறு' என்பது அதனதன் சுபாவப்படியே யாம் என்க.

6. மெய்யெல்லா மாகி நரம்போ டெலும்பிசைந்
பொய்யில்லை நாடிப் புணர்வு. [து

உரை:—நரம்பினது கூட்டுறவானது சரீர முழுமைக்கு மாகி நரம்புகளுடன் எலும்புகளும் கலந்து நிற்கும். இது பொய்யல்ல; உண்மை.

கருத்து:—நரம்புகளானது சரீரமுழுமைக்கும் எலும்புகளுடன் கலந்தே யிருக்கும்.

விசேஷம்:—நரம்புகளில்லாதபோது சரீரம் நிலையாதாகையால் 'மெய்யெல்லாம்' என்றார்.

'பொய்யில்லை' என்றதற்கு எதிர்மறைச்சொல் மெய்யாகையால், அது உண்மை என்பதாம்.

7. உந்தி முதலாகி யோங்காரத் துட்பொருளாய்
நின்றது நாடி நிலை.

உரை:—நாடியின் நிலையானது உந்திமுதலாய் பிரணவத்திற்கு அந்தர்முகப் பொருளாய் இருக்கின்றது.

கருத்து:—சரீரத்துள் நாடிகளின் நிலையானது கொப்பூழ்முதல் ஓங்காரம் வரையில் ஆதார ஸ்தானமாகும்.

விசேஷம்:—நாடிகள் உந்தியி லெழுந்தே ஓங்காரந் தொட்டு சரீரமுழுதும் பரவுவதால் நமக்கு ஆதாரம் உந்தியென்றே கருதவேண்டும்.

8. நாடிக ளூடுபோய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடு தருமாம் விரைந்து.

உரை:—நரம்புகளின் வழியே சென்று புகுந்த நலம் பொருந்திய தேஜோமயப் பொருளானது விரைவில் மோட்சத்தைக் கொடுக்கும்.

கருத்து:—ஸ்தூல நரம்புகளின் சூட்சமமாய் விளங்கும் தேஜோமயத்தை அடைவதே மோட்சமாம்.

விசேஷம்:—கடவுள் ஒவ்வொரு ஆன்மாக்களிலும் நரம்புகள் வழியே கலந்திருப்பவன். அதில் பிரகாசிப்பவன். இதனை யுணர்வுடையோர்களே யுணரலாகும். அவ்வா றுணர்வதே மோட்சமாகும். இதனால் மோட்சபூமி நமக்குள்ளேயே யன்றி, புறத்தே யில்லையென விளங்கக் கூறியதாகும்.

9. நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு.

உரை:—நரம்புகளின் வழக்கங்களை நன்கு தெரிந்து அதுவழியே நெருங்கி ஒடுங்கி நின்தேஜஸைத் தெரிசிப்பது அறிவு.

கருத்து:—நரம்புகளின் வழியறிந்து கடவுளைத் தரிசிப்பது அறிவுடைமையாகும்.

விசேஷம்:—சிவபெருமானைக் காண்பதற்கு நாடியே ஆதாரமாகும். அவ்வாறு இயற்றுதற்கு அறிவே முதன்மையா மென்க.

10. அறிந்தடங்கி நிற்குமந் நாடிக டோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம்.

உரை:—அறிந்து, அடங்கி, இருக்கின்ற அந்த நாடிகளி லெல்லாம் சிவம் நிறைந்து மறைந்து இருக்கும்.

கருத்து:—சிவம் எப்போதும் நரம்புகளிலெல்லாம் நிறைந்திருக்கும்.

விசேஷம்:—சிவம் நரம்புகள்தோறும் தோன்றுது பாலில் நெய்போல மறைந்திருக்கும்.

சிவம் என்பது:—சீவன், உயிர், கடவுள்.

நாடிதாரணை முற்றிற்று.

ஆக செய்யுள் 40.

5. வாயுதாரணை

1. மூலத்திற் றோன்றி முடிவிலிரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண்.

உரை:—வாயுவானது மூலாதாரத்தில் உற்பவமாய், முடிவினில் எட்டாகி வெளியினிடத்து பன்னிரண்டாகும். காண் - அசை.

கருத்து:—வாயுவானது மூலாதாரத்திற்றோன்றி எட்டாகி, பரந்து வெளியாகும்போது பன்னிரண்டாகும்.

விசேஷம்:—வாயுதாரணை செய்வோர் இதனை முதலில் கவனித்தல் வேண்டும்.

2. இடைபிங் கலைக ளிரேசக மாற்றில்
அடையு மரனா ரருள்.

உரை:—இடைகலையிலும், பிங்கலையிலும் இரேசகஞ் செய்தால் சிவபெருமானுடைய திருவருள் உண்டாகும்.

கருத்து:—இரேசகம், பூரகம், கும்பகங்களைச் செய்யில் கடவுள் திருவருள் கைகூடும்.

விசேஷம்:—இடைகலை - இடது நாசியிலுலாவும் சுவாசம். பிங்கலை - வலது நாசியிலுலாவும் சுவாசம்.

3. அங்குலியான் மூடி முறையா லிரேசிக்கிற்
பொங்குமாம் பூரகத்தி னுள்.

உரை:—விரல்களினால் மூடி விதிப்படி இரேசகஞ்செய்தால் அது பூரகத்திலே விளங்கும்.

கருத்து:—விரல்களால் நாசியை மூடி அளவுபடி இரேசக பூரகம் செய்யில் அருளானந்தம் விளங்கும்.

4. எண்ணிலி யூழி யுடம்பா யிரேசிக்கில்
உண்ணிலைமை பெற்ற துணர்வு.

உரை:—அநேக காலங்கள் உடம்பில் ஆராய்ந்து இரேசகஞ்செய்தால் உணர்ச்சியானது உள்நிலையைப் பெற்றதாகும்.

கருத்து:—அநேக காலங்கள் பிராணயாமஞ் செய்தால் சரீரம் உறுதியை யடையும்.

5. மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்ற வாயு
உயிர்ப்பின்றி யுள்ளே பதி.

உரை:—சரீரத்தின் மயிர்க்கால் வழிகளிலெல்லாம் அடைகின்ற காற்றைப் பெருமூச்சுவிடாமல் அந்தர்முகத்தில் அடக்கஞ் செய்வாயாக.

கருத்து:—மயிர்க்கால் வழியெல்லாம்பாயும் சுபாவமுடையகாற்றை உள்ளே அடக்க வேண்டும்.

6. இரேசிப் பதுபோலப் பூரித்து நிற்கிற்
றராசுமுனை நாக்கதுவே யாம்.

உரை:—இரேசகஞ் செய்வதுபோல பூரகஞ் செய்திருந்தால் நாக்கானது, தராசுமுனைபோல் நிற்கும்.

கருத்து:—இரேசகத்தின் அளவுபோலவே பூரகமும் அளவாய்ச் செய்யில் நாக்கு தராசுமுனைபோல நடுநிலையாய் நிற்கும்.

7\. கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தானோக்கி
தும்பிபோ னிற்குந் தொடர்ந்து. [ற்

உரை:—கும்பகத்தில் சிவபெருமானைக் குறிப்பாக நோக்கித் தரிசிக்கில் வாயுவானது தும்பிபோ லிருக்கும்.

கருத்து:—பிராணவாயுவை இருவழியிலும் செல்லவிடாமல் கும்பகஞ்செய்யில் அங்கு வாயுவானது தும்பிபோல அசைவற்று நிற்கும்.

விசேஷம்:—இரேசகம் - சுவாசத்தை வெளியேவிடுதல்; பூரகம் - சுவாசத்தை உள்ளே இழுப்பது; கும்பகம் - சுவாசத்தை அடக்குதல்.

8\. இரேசக பூரக கும்பக மாற்றிற்
றராசுபோ னிற்குந் தலை.

உரை:—இரேசகத்தையும், பூரகத்தையும், கும்பகத்தையும் கிரமப்படி செய்யில் சிரசு தராசு முனைபோல் நிற்கும்.

கருத்து:—இரேசக, பூரக, கும்பகத்தை விதிப்படி செய்யில் சிரசு அசைவற்று நிற்கும்.

விசேஷம்:—தராசுமுனை - இருபாகத்திற்கும் நடுநிலை காட்டும் அடையாளம் (நடுமுள்)

9\. வாயு வழக்க மறிந்து செறிந்தடங்கில்
ஆயுட் பெருக்கமுண் டாம்.

உரை:—சுவாசம் மாறும்படியான வழக்கத்தை நன்றாயறிந்து ஒருமித்து ஒடுங்கினால் ஆயுள் விருத்தியுண்டாகும்.

கருத்து:—வாயுவின் பழக்கமறிந்து உள்ளே அடக்கிறல் ஆயுள் விருத்தியடையும்.

விசேஷம்:—பிராணயாமஞ் செய்து காற்றையடக்கப் பழக்க முண்டானல் ஆயுள் வளரும் என்று யோக நூல்கள் கூறும்.

10. போகின்ற வாயு பொருந்திற் சிவமோக்கும்
தாழ்கின்ற வாயு வடக்கு.

உரை:—வெளியே போகின்ற சுவாசம் சரீரத்திற்குள் அடங்கினல் சிவத்திற் கொப்பாகும். அவ்வாறு கழியும் சுவாசத்தை உள்ளே அடக்கவும்.

கருத்து:—வெளியே கழியும் சுவாசத்தை உள்ளே அடக்கினல் சிவபெருமானுகக் கூடும்.

வாயுதாரணை முற்றிற்று.
ஆக செய்யுள் 50.

---

6. அங்கிதாரணை

1. அந்தத்தி லங்கி யழல்போலத் தாஞேக்கிற்
பந்தப் பிறப்பறுக்க லாம்.

உரை:—முடிவில் மூலாக்கினியைப் பிரகாசம்போல் தரித்த யோகியானவன் பந்தமான ஜென்மத்தை அகற்றலாம்.

கருத்து:—கடைசியில் யோகிகள் மூலாக்கினி தேஜஸைத் தரிசித்தால் பிறப்பை வராது ஒழிக்கலாம்.

2. உள்ளும் புறம்பு மொருங்கக் கொழுவூறிற்
கள்ளமல மறுக்க லாம்.

உரை:—உள்ளிலும் வெளியிலும் ஏகமாய் கொழுமை யூறுமானால் வஞ்சனையையுடைய மாய்கையை அறுக்கலாம்.

கருத்து:—அகமும் புறமும் ஏகமாய்ப் பார்ப்போர், மாய்கையை ஒழித்தவ ராவார்கள்.

3. எரியுந் தழல்போல வுள்ளுற நோக்கிற்
கரியுங் கனலுருவ மாம்.

உரை:—எரிகின்ற அக்கினியைப்போல உண்முகத்தில் தரிசித்தால் அடுப்புக்கரியும் நெருப்பின் ரூபம் அடைவதாகும்.

கருத்து:—அந்தர்முகத்தில் அனலுருவத்தைத் தரிசனம் செய்யவேண்டும்.

விசேஷம்:—இது ஞானதீபம். இத்தரிசனமே மோட்சமென்பது.

4. உள்ளங்கி தன்னை யொருங்கக் கொழுவூறில்
வெள்ளங்கி தானும் விரைந்து.

உரை:—உள்ளே யிருக்கும் மூலாக்கினியை ஒருங்கக் கொழுமையானது ஊறினால் சீக்கிரத்தில் அது வெண்மை நிற அக்கினியாகும்.

கருத்து:—மூலாக்கினியை வலுபெறச் செய்தால் வெள்ளங்கியாகும். அங்கி - அக்கினி.

5. உந்தியி னுள்ளே யொருங்கச் சுடர்பாய்ச்சில்
அந்தி யுழலுருவ மாம்.

உரை:—மூலாதாரத்தில் ஏகமாக அக்கினியைப் பாய்ச்சியினுல் மாலைநேரத்தில் சரீரம் அக்கினிமயத்தை யடையும்.

கருத்து:—மூலாக்கினியை அதிகப்படுத்துவதால் சரீரம் அக்கினிமயத்தை யடையும்.

6. ஐயைந்து மாய வகத்து ளெரிநோக்கிற்
பொய்யைந்தும் போகும் புறம்.

உரை:—இருபத்தைந்து தத்துவங்களும் ஒழிய சரீரத்தினுள்ளே மூலாக்கினியைத் தரிசித்தால் ஐந்து பொய்களும் வெளியாகிப் போகும்.

கருத்து:—மூலாக்கினியைத் தரிசிப்பதால் ஐம்பொய்களும் வெளிப்பட்டுப் போகும்.

7. ஐம்பது மொன்று மழல்போலத் தானேக்கில்
உம்ப ரொளியாய் விடும்.

உரை:—ஐம்பத்தோரட்சரங்களையும் அக்கினிசொரூபமாகத் தான் நோக்கினுல் தெய்வ ஒளியாய் கைகூடும்.

கருத்து:—தேஜோமயத்தைத் தரிசித்தால் சரீரமும் தேஜோமயத்தை யடையும்.

விசேஷம்:—'உம்பர் ஒளி' என்றது கடவுளார் நோக்கும் கட்வுளே தேஜமயமாம்.

8. தூண்டுஞ் சுடரைத் துளங்காமற் றுநோக்கில்
வேண்டுங் குறைமுடிக்க லாம்.

உரை:—தூண்டப்படுகின்ற ஞானச்சுடரை அசையா யாமல் பார்த்தால் மனத்தில் விரும்பப்படும் குறைகளை முடிக்கலாம்.

கருத்து:—தேஜமயத்தை அசையாமல் பார்ப்பவர் கள் ஏது குறையும் அற்றவராவார்கள்.

9. உள்ளத்தா லங்கி யொருங்கக் கொழுவூறில்
மெள்ளத்தான் வீடாம் விரைந்து

உரை:—மனத்தினல் நெருப்பு முழுமையும் கொழு ஊறினல், மோட்சமானது பொறுமையோடு விரைந்துண் டாம்.

கருத்து:—அக்கினிவாசமே மோட்சமென்பதாம்.

10. ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்
வெள்ளியா மாலை விளக்கு.

உரை:—பிரகாச முற்றிருக்கின்ற தேஜோமயத்தைப் பொருந்திப் பார்த்தால் மாலையிலுண்டான விளக்கானது வெள்ளிபோல விளங்கும்.

கருத்து:—வெளிச்சமே மோட்சமென்பதாம்.

அங்கிதாரணை முற்றிற்று.
ஆக செய்யுள் 60.

---

7. அமுததாரணை

1. அண்ணாக்குத் தன்னை யடைத்தங் கமிர்துண்
விண்ணோர்க்கு வேந்தனு மாம். [ணில்

உரை:—உள்ளே மேல்நாக்கை மேல்வழிக்கு அடைத்து அங்குண்டாகின்ற அமுதத்தைச் சாப்பிட்டால், தேவர்க்கு அதிபதியாகும் இந்திரனு மாகலாம்.

கருத்து:—அமுதபாணமே இந்திரபோகமாகும்.

2. ஈரெண் கலையி னிறைந்த வமிர் துண்ணில்
பூரண மாகும் பொலிந்து.

உரை:—பதினாறு கலைகளிலும் பூரணமாயிருக்கும் அமிர்தத்தை யுட்கொள்வதால் பரிபூரணத்தை யடைய லாம்.

கருத்து:—அமிர்தம் உண்ணுவது மோட்சமாகும்.

3. ஓங்கார மான கலசத் தமிர் துண்ணில்
போங்கால மில்லை புரிந்து.

உரை:—பிரணவாகாரமாயிருக்கும் கலசத்துள்ள அமுதத்தைப் பாணஞ்செய்தால் இறக்குங்காலம் வருவதில்லையாகும்.

கருத்து:—அமுத முண்டவர்க்கு மரணமில்லை என்பதாம்.

4. ஆன கலசத் தமிர்தை யறிந் துண்ணில்
போனகம் வேண்டாமற் போம்.

உரை:—பொருந்திய கலச அமிர்தத்தை யருந்திடில் சாப்பாடு வேண்டாமற் போய்விடும்.

கருத்து:—யோகாமிர்தத்தை யுண்பவர்கள் என்றைக்கும் ஆகாராதிகள் வேண்டாதவ ராவார்கள்.

குறிப்பு:—போனகம் - சாப்பாடு.

5. ஊறு மமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கிற்
கூறும் பிறப்பறுக்க லாம்.

உரை:—சுரக்கும் அமுதத்தை ஆகாரமாகப் பார்த்தால் சொல்லப்படும் ஜென்மக்கருவை ஒழிக்கலாம்.

கருத்து:—யோகத்தினுலுண்டாகும் அமிர்தத்தை யுண்பவன் இனிவரும் ஜென்மவேரை அறுப்பவனுவான்.

6. ஞான வொளிவிளக்கா னல்ல வமிர்துண்ணில்
ஆன சிவயோகி யாம்.

உரை:—ஞானப்பிரகாசமுடைய தீபத்தால் உயர்வாகிய அமிர்தத்தை யுண்டால் பொருத்தமான சிவயோகியாகக்கூடும்.

கருத்து:—யோக ஞானத்தால் பெருகும் அமிர்தத்தைப் பானஞ்செய்தால் உயர்வாகிய சிவயோகியாவதற்கு ஐயமில்லை.

விசேஷம்:—ஞானம், ஒளி, விளக்கு, அமிர்தம் என்னும் நாமமெல்லாம் ஒன்றே பொருள்படும்.

7. மேலை யமிர்தை விலங்காமற் றுணுண்ணிற்
காலனை வஞ்சிக்க லாம்.

உரை:—உயர்வாகிய சிரசில் விளைந்து வருகின்ற அமிர்தத்தை ஒழியாமல் உண்ணப்பட்டால் எமனை வஞ்சனை செய்யக்கூடும்.

கருத்து:—மேற்பட்ட ஸ்தானத்தில் வரும் அமிர்தத்தைப் பருகினால் எமபயமின்றி சிரஞ்சீவியா யிருக்கலாம்.

8. காலன லூக்கக் கலந்த வமிர் துண்ணில்
ஞான மதுவா நயந்து.

உரை:—காற்றின் அனல் ஊத்தி அதனோடு கலந்த அமிர்தத்தைப் பருகினால் விரும்பிய ஞானம் அதுவே யாகும்.

கருத்து:—காற்றும் அனலும் கலந்து பொழியும் அமிர்த முண்பதே ஞானமாகும்.

விசேஷம்:—இந்த அமிர்தமே "ஞானப்பால்" என்று சொல்லப்படும்.

9. எல்லையி னின்னமிர்த முண்டாங் கினிதிருக்கி
தொல்லை முதலொளியே யாம். [ல்

உரை:—அளவு சொல்லக்கூடாத இனிய அமிர்தத்தை யுண்டு அவ்விடத்தில் இன்புற்றிருந்தால் பழமையாகிய முதல்வன் பிரகாசமே யாகும்.

கருத்து:—பேரின்ப அமிர்தத்தை யுண்டிருக்கில் சிவ பெருமானுடைய சொரூபமே யாகும்.

10. நிலாமண் டபத்தி னிறைந்த வமிர் துண்ணில்
உலாவலா மந்தரத்தின் மேல்.

உரை:—சந்திர மண்டபத்தின்கண் நிறைந்திருக்கின்ற அமிர்தத்தைப் பருகினால் ஆகாயத்தில் வாசம் செய்யலாம்.

கருத்து:—சந்திரமண்டல அமிர்தத்தைப் புசித்தால் ககனசஞ்சாரம் செய்யலாம்.

அமுததாரணை முற்றிற்று.
ஆக செய்யுள் 70.

---

8. அர்ச்சனை

1. மண்டலங்கள் மூன்று மருவ வுடனிருத்தி
   அண்டரனை யர்ச்சிக்கு மாறு.

உரை:—சந்திர மண்டலம், சூரிய மண்டலம், அக்கினி மண்டல மென்னும் மும்மண்டலங்களைச்சேர, அங்கு உடனே யிருக்கச்செய்து பொருந்தும் சிவபெருமானை அர்ச்சனைசெய்யு மார்க்கமாகும்.

கருத்து:—சோம சூரியாக்கினி என்னும் மும்மண்டலங் களையும் சேர்ந்து அரனை அர்ச்சனை செய்வது சகாயமான வழித்துணையாகும்.

2. ஆசனத்தைக் கட்டி யரன்றன்னை யர்ச்சித்து
   பூசனைசெய் துள்ளே புணர். [ப்

உரை:—ஆசனங்களை எற்படுத்திக்கொண்டு ஈஸ்வரனை அர்ச்சனைசெய்து பூசித்து மனத்துள்ளே கலப்பாயாக.

கருத்து:—ஆசனங்கொண்டு யோகத்தால் சிவபெரு மானைக் கலக்கவேண்டும்.

விசேஷம்:—அறுபத்து நான்கு ஆசனமிருப்பினும் பத் மாசனமும் சுகாசனமுமே எற்றதாகும்.

3. உள்ளமே பீட முணர்வே சிவலிங்கந்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு.

உரை:—ஆராய்ந்து தெரிந்த யோகிகள் மனமே பீடமாகவும், உணர்ச்சியே சிவலிங்கமாகவும் அர்ச்சனைசெய்யும் விதமாகும்.

கருத்து:—யோகஞானிகள் அந்தர்முகமாக இருதய கமலத்திலேயே வணங்குவார்கள்.

4. ஆதாரத் துள்ளே யறிந்து சிவனுருவைப்
பேதமற வர்ச்சிக்கு மாறு.

உரை:—சிவபெருமானுடைய ரூபத்தை ஆறு ஆதாரங்களுக்குள்ளே அறிந்து வித்தியாச மில்லாமல் அர்ச்சனை செய்யும் விதமாகும்.

கருத்து:—ஆறுதாரத்தில் சிவபெருமானை அர்ச்சிக்கும் வழியாகும்.

விசேஷம்:—ஆறுதாரமாவது:—"மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்ஞை" என ஆறுகும்.

மூலாதாரந்தொட்டு ஆறுவது மேல் ஆதாரமாகிய ஆக்ஞையை யடைவதே மோட்சமாகும்.

5. பூரித் திருந்து புணர்ந்து சிவனுருவைப்
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு.

உரை:—பூரகஞ்செய்து கலந்து சிவபெருமானுடைய சொரூபத்தை அவ்விடத்தில் அர்ச்சிக்கும் விதமாகும்.

கருத்து:—பூரகத்தால் சிவபெருமானை அர்ச்சிக்க வேண்டும்.

விசேஷம்:—யோகத்தால் சிவபெருமானை அர்ச்சிக்க வேண்டுமானால் இரேசக, பூரக, கும்பகமே ஆவசியமாகிய தால் பூரகத்தினாலேயே அர்ச்சிக்கவேண்டும் என்றார்.

6. விளக்குறு சிந்தையான் மெய்ப்பொருளைக்
துளக்கற வர்ச்சிக்கு மாறு. [கண்டு

உரை:—விளங்கப்பட்ட மனத்தினால் உண்மை வஸ்து வைப் பார்த்து குற்றமில்லாமல் அர்ச்சனைசெய்யும் வித மாகும்.

கருத்து:—தெளிந்த சிந்தையால் குற்றமின்றி அர்ச்சிக்க வேண்டும்.

விசேஷம்:—கற்றல், கேட்டல், சிந்தித்தல் என்னும் மூன்றுந்தெரிந்து நடப்பவர்களே தெளிந்தவ ராவார்கள்.

7. பிண்டத்தி னுள்ளே பேரா திறைவனை
கண்டுதா னர்ச்சிக்கு மாறு.

உரை:—சரீரத்தினுள்ளே நீங்காத சர்வேஸ்வரனைக் கண்டு அர்ச்சிக்கும் விதமாகும்.

கருத்து:—உள்ளிடத்தில் நீங்காத கடவுளை அர்ச்சிக்க வேண்டியது.

விசேஷம்:—சரீரத்தினுள்ளே கடவுளை யறியலாமே யன்றி, பகிர்முகமாக அறிய வியலாதாகும்.

8. மந்திரங்க ளெல்லா மயங்காம லுண்ணினைந்
முந்தரனை யர்ச்சிக்கு மாறு. [து

உரை:—எல்லா மந்திரங்களிலும் மயக்கத்தை வையாமல் அகத்தினுள்ளே நினைந்து முன்னதாக சர்வேஸ்வரனை அர்ச்சிக்கும் விதமாகும்.

கருத்து:—எந்த மந்திரங்களிலும் மனது மயங்காமல் சரீரத்தினுள்ளே வணங்கவேண்டும்.

விசேஷம்:—மந்திரங்களி வில்லாமல் மனத்தால் அர்ச்சிக்கவேண்டும் என்றார்.

9. பேராக் கருத்தினுற் பிண்டத்தி னுண்ணினைந்
தாரா தனைசெய்யு மாறு.

உரை:—உள்ளிடத்திலிருந்து ஒழியாத எண்ணத்தினால் நினைந்து சிவபெருமானை ஆராதனை செய்யும் விதமாகும்.

கருத்து:—அந்தர் முகத்தில் நீங்காத நினைவுடன் ஆராதனை செய்யவேண்டும்.

விசேஷம்:—கடவுள் அந்தர் முகத்தில் விளங்கப்பட்டவர்; அவரை இடைவிடாது சிந்திக்கவேண்டும் என்றார்.

10. உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கொண்சு
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு. [டரை

உரை:—பிரகாசமாகிய தேஜோ மயவஸ்துவை மனத்தினுள்ளே பொருந்தக்கண்டு அங்கு மெதுவாக அர்ச்சனை செய்யும் விதமாகும்.

கருத்து:—சுடர்மயதேவனை அந்தர்முகத்தில் பூஜிக்க வேண்டும்.

விசேஷம்:—ஞானச்சுடரே கடவுளும் மோட்சமு மாகும்.

அர்ச்சனை முற்றிற்று.

ஆக செய்யுள் 80.

---

9. உள் ளு ண ர் த ல்

1. எண்ணிலி யூழி தவஞ்செய்திங் கீசனை
உண்ணிலைமை பெற்ற துணர்வு.

உரை:—கணக்கற்ற அநேக காலங்களாக தவஞ்செய்து இவ்விடத்துச் சர்வேஸ்வரனை மனவலுவால் அடையப்பெற்றது உணர்ச்சியாகும்.

கருத்து:—அநேக காலம் இடைவிடாது தவஞ்செய்து சிவனை யடையப்பெற்றது உணர்ச்சியே யாம்.

2. பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம்.

உரை:—பல்காலமாகப் பழகி ஈஸ்வரனை அர்ச்சனை செய்து பெற்ற பயனாவது நல்ல உணர்ச்சியே யாம்.

கருத்து:—நெடுங்காலம் தவஞ்செய்து பெற்ற நன்மை உணர்ச்சியினாலாம்.

3. எண்ணற் கரிய வருந்தவத்தா லன்றே
நண்ணப் படுமுணர்வு தான்.

உரை:—மனத்தில் நினைப்பதற்கு அருமையான அரிய தவத்தினால் அடையப்படுவது உணர்வுதான்.

கருத்து:—அரிய தவத்தால் அடைவது நல்ல உணர்வேயாம்.

4. முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்
பின்னைப் பெறமுணர்வு தான்.

உரை:—முன் ஜென்மத்தில் முயற்சிசெய்த தவப்பலனால் பிறகு அடையத்தக்கதானது நல்ல உணர்வேயாகும்.

கருத்து:—பூர்வஜென்ம தவசிரேஷ்டத்தினால் இந்த ஜென்மத்தில் நல்ல உணர்ச்சியை யடைவதாகும்.

5. காயக் கிலேச முணர்ந்த பயனன்றே
ஓயா வுணர்வு பெறல்.

உரை:—சரீரத்தினுடைய சந்தேகத்தைத் தெரிந்துக் கொண்ட பயனல்லவா ஒழிதலில்லாத உணர்ச்சியைப் பெறுவதாகும்.

கருத்து:—தேகத்தின் உண்மையைத் தெரிந்துக்கொண்டு தவஞ்செய்வதே நல்லுணர்வு பெறுவதாகும்.

இதனை:—

"தன்னையுந்தனக்காதாரத் தலைவனையுங் கண்டாயேல்
பின்னையுந்தலைவன்றானும் பிரமமாய் பிறப்பு தீர்ப்பான்"

என்பதனா லறிக.

6. பண்டைப் பிறவிப் பயனாந் தவத்தினால்
கண்டங் குணர்வு பெறல்.

உரை:—முன்ஜென்மத்தின் பயனாகிய தவத்தினால் இப்போது பார்த்து அங்கு நல்லுணர்வைப் பெறுவதாகும்.

கருத்து:—பூர்வஜென்ம புண்ணியத்தின் பயனே இந்த சென்மத்தில் நல்லுணர்வை யடையப் பெற்றதாகும்.

7. பேராந் தவத்தின் பயனும் பிறப்பின்மை
ஆராய்ந் துணர்வு பெறின்.

உரை:—நீங்காத தவத்தின் பயனே ஜென்மமில்லாமையை ஆராய்ந்து உணர்ச்சி பெறுவதாகும்.

கருத்து:—ஒழியாத தவப்பயனே நல்லுணர்ச்சியைப் பெறுவதாகும்.

விசேஷம்:—'பேராந் தவம்' என்பது தவத்தின் விதம் இடைவிடாது செய்யவேண்டும். அவ்வாறு செய்யிற்றான் நல்லுணர்ச்சி கைகூடும் என்றார்.

8. ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு.

உரை:—ஞானத்தினா லுண்டானது சரீரத்தின் பிரயோஜனம்; மௌன ஞானத்தாலுண்டான நல்லுணர்ச்சியாலாகும்.

கருத்து:—ஞான சரீரத்தின் பயனே மௌனத்தாலுண்டான உணர்வாகும்.

விசேஷம்:—ஞானத்தாலுண்டான சரீரம், உள்ளுடம்பேயாம்.

9. ஆதியோ டொன்று மறிவைப் பெறுவதுதான்
நீதியாற் செய்த தவம்.

உரை:—முதற் பொருளோடு கலந்தியங்கும் உணர்ச்சியைப் பெறுதே நீதியோடு செய்த தவமாகும்.

கருத்து:—நீதியோடு செய்யுந் தவமே நல்லுணர்வாகும்.

10. காடு மலையுங் கருதித் தவஞ்செய்தால்
கூடு முணர்வின் பயன்.

உரை:—காட்டிலும் மலையிலுமிருந்து கருதி தவத்தைச் செய்தால் நல்லுணர்வின் பயன் சித்தியாகும்.

கருத்து:—காடுகளிலும் மலைகளிலும் தவஞ்செய்வது நல்லுணர்ச்சிக்கு அநுகூலமாகும்.

"கனியேனுமரிய செங்காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்களேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப்புசித்துநான்
கண்மூடி மௌனியாகி
தனியேயிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ"

என்றருளிய தாயுமானுர் திருவாக்கா லறியலாம்.

உள்ளுணர்தல் முற்றிற்று.

ஆக செய்யுள் 90.

10. பத்தியுடமை

1. பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தாணுக்கில்
முத்திக்கு மூல மது.

உரை:—அன்பினால் மனதில் விரும்பிச் சிவபெருமானைக் காணில், அப்பார்வையானது மோட்சத்திற்குக் காரண மாகும்.

கருத்து:—சிவபெருமானைப் பக்தியோடு பூசிப்பதே மோட்சத்திற்குக் காரணமாகும்.

2. பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவசிந்தை யால்.

உரை:—பாடியும், ஆடியும், அநேககாலம் பழகியும் சிவனை நினைக்கும் மனத்துடனே தேடவேண்டும்.

கருத்து:—பாடியாடி பக்தியால் பழகவேண்டும்.

விசேஷம்:—'சிவசிந்தை' என்றது; "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்பதனு லறிக.

3. அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை.

உரை:—நம்மை யாட்கொண்டருள்புரியும் சிவபெரு மானைப் பக்தியினால் அழுதும் அலறியும் எலும்புகள் உருகும் படி மனத்துள்ளே பூசனைசெய்.

கருத்து:—கடவுளை அன்பினால் சிந்திக்கவேண்டும்.

'அன்பால் அழுதும் அலறியும்' என்றதை:—

"அரும்பொனேமணியே யென்பே யென்பான
வறிவே யெனறிவிலூறு
மானந்தவெள்ளமே யென்றென்று பாடினே
ஞடினே ஞடிநாடி
விரும்பியேகூவினே னுலறினே னலறினேன்
மெய்ச்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரியெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற்ற யர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனுனுமுனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
வென்றுநீயன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னெனினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமேபரஞ்
சோதியே சுகவாரியே"

என்னும் தாயுமானவர் வாக்கா லறிக.

4. பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேசத்தா லீசனைத் தேடு.

உரை:—பூசைசெய்து கொண்டாடி மனம் ஒருமித்து அன்பினுல் சர்வேஸ்வரனை உணரவேண்டும்.

கருத்து:—பரமசிவனை மனத்தில் ஒருமித்துப் பூசித்து ஆனந்தித்துத் தேடவேண்டும்.

5. கண்ணு லுறப்பார்த்துக் காதலாற் றூநோக்கில்
உண் ணுமே யீச னொளி.

உரை:—கண்களால் பொருந்தப் பார்த்து விருப்பத் துடன் நோக்கினால் சர்வேஸ்வரனுடைய பிரகாசமானது விழுங்கக்கூடியதாக விளங்கும்.

கருத்து:—உள்ளபடியே அந்தர்முகமாக தரிசிப்பவர் களுக்குச் சிவபெருமானுடைய தேஜோ மயமானது தன் னுள் அடக்கி நிற்கும்.

6. நல்லானைப் பூசித்து நாத னெனவுருகில்
நில்லாதோ வீச னிலை.

உரை:—எல்லோர்க்கும் நல்லவனாகிய சர்வேஸ்வரனைப் பூசைசெய்து, எனது தலைவனேயென்று மனதில் உருகினால், அந்த ஈசனுடைய உண்மை நிலையானது நம்பால் குடி கொண்டிருக்க மாட்டாதோ?

கருத்து:—நல்ல மனத்துடன் இளகும்படி பூசிப்பவர் களுக்கு ஈசன் திருவருள் நிலைபெற்றிருக்கும்.

7. அடியார்க் கடியரா யன்புருகித் தம்முள்
படியொன்றிப் பார்த்துக் கொளல்.

உரை:—அடியார்களுக்கு அடியார்களாகிப் பக்தியால் உருகி மனத்தின்கண் உள்ளுலகங்களிற் கலந்து உணர்ந்து அடையவேண்டும்.

கருத்து:—அடியார்க்கடியார்போல் மனமுருகி தரிசிக்கவேண்டும்.

விசேஷம்:—அடியார்க்கடியராய் என்றது, பக்தியின் விருத்தியை முன்னிட்டுக் கூறினர் என்க.

8. ஈசனெனக்கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீநினைந்து கொள்.

உரை:—எல்லா வுயிர்களையும் சர்வேஸ்வரனுடைய திருவுருவமெனக்கருதி அன்பினுல் பக்தி செய்துக்கொள்ளக் கடவாய்.

கருத்து:—சர்வ ஆன்மாக்களும் ஈஸ்வரமயமாகும்.

9. மெய்ம்மயிர் கூர விதிர்ப்புற்று வேர்த்தெழுந்து
பொய்ம்மையி லீசனைப் போற்று.

உரை:—சரீரத்தில் மயிர்க்குச்செறிய புளகாங்கிதமாய் வேர்வையுடன் எழுந்து பொய்யில்லாது உண்மையாக விளங்குகின்ற சர்வேஸ்வரனைப் பூசனைசெய்.

கருத்து:—உண்மையான கடவுளைச் சரீரம் புளகாங்கிதங்கொள்ள வணங்கவேண்டும்.

10. செறிந்தறிந்து நாடியே செவ்விதா யுள்ளே
அறிந்தரனை யாய்ந்து கொளல்.

உரை:—சேர்ந்து அறிந்து விரும்பி நன்ருய் மனத்தின் கண்ணே ஆராய்ந்து சர்வேஸ்வரனைத் தேடவேண்டும்.

கருத்து:—இறைவனை உண்முகத்தில் நன்ருய் ஆராய்ந்து தரிசிக்கவேண்டும்.

பத்தியுடைமை முற்றிற்று.

ஆக செய்யுள் 100.

முதலாவது வீட்டுநெறிப்பால் முற்றிற்று.

இரண்டாவது

திருவருட்பால்

1. அருள் பெறுதல்

1. அருளினு லன்றி யகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம்.

உரை:—சர்வேஸ்வரன் திருவருளில்லாமல் மனத்தின் கண்ணே விளங்கக்கூடிய மற்ருேர் அறிவு இல்லை. அத்தகைய அருளினல் மும்மலங்களை வேரறுக்கக்கூடும்.

கருத்து:—மலக்குற்றங்களை இறைவன் திருவருளால் அறுத்தொழிக்கலாம்.

மும்மலமாவது:—ஆணவம், காமியம், மாயை.

ஆணவம்:—உடம்பை நானென்றிருக்கிறது.

காமியம்:—கண்டவைக்கெல்லாம் ஆசைப்படுகை.

மாயை:—தனக்கு வருகையறியாமை கோபங்கொண்டிருக்கை.

2. இருளைக் கடிந்தின் றிறைவ னருளால்
தெருளுஞ் சிவசிந்தை யாம்.

உரை:—இன்றே அஞ்ஞானமாகிய இருளை அறவொழித்தால் சிவபெருமானுடைய திருவருளால் தெளிவாகிய சிவசிந்தனை யுண்டாகும்.

கருத்து:—அஞ்ஞான சிந்தை யொழிந்தால் மெய்ஞ்ஞான சிந்தனை யுண்டாகும்.

3. வாய்மையாற் பொய்யா மனத்தினால் மாசற்ற
தூய்மையா மீச னருள்.

உரை:—உண்மையாலும், பொய்யில்லா உண்மை மனத்தினாலும், குற்றமற்ற பரிசுத்தத்தினாலும் இறைவன் திருவருள் உண்டாகும்.

கருத்து:—உண்மையைக் கடைப்பிடித் தொழுகுபவர்க்குக் கடவுள் திருவருளுண்டாகும்.

4. ஒவ்வகத்து ணின்ற சிவனருள் பெற்றக்கால்
அவ்வகத்து ளானந்த மாம்.

உரை:—பொருந்திய மனத்தின்கண் விளங்கி யிருந்த சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றால் உள்ளகத்திற்கு ஆனந்த முண்டாகும்.

கருத்து:—மனத்துளிருக்கும் சிவபெருமான் திருவருளைப் பெற்றால் ஆனந்த மனமாகும்.

5. உன்னுங் கரும முடிக்கலா மொள்ளிதாய்
மன்னு மருள்பெற்றக் கால்.

உரை:—பிரகாச முடையதாய் நிலைபெற்றிருக்கின்ற திருவருளை யடையப்பெற்றால் நினைக்கப்பட்ட கருமங்களை யெல்லாம் முடிக்கலாம்.

கருத்து:—கடவுள் அருளையடைந்தால் எண்ணிய காரியங்களை நிறைவேற்றலாம்.

6. எல்லாப் பொருளு முடிக்கலா மீசன்றன்
தொல்லை யருள்பெற்றக் கால்.

உரை:—சர்வேஸ்வரனுடைய பழமையாகிய திருவருளை யடையப் பெற்றால் எல்லாப் பொருள்களையும் நிறைவேற்றலாம்.

கருத்து:—இறைவன் திருவருளை யடையப்பெற்றவர்கள் எல்லாம் செய்ய வல்லவர்களாவார்கள்.

7. சிந்தையு ணின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாச மறும்.

உரை:—மனத்தின்கண் விளங்கும் சிவபெருமானுடைய திருவருளை யடைந்தால் பந்திக்கப்பட்ட மாய்கையானது விலகும்.

கருத்து:—உள்ளமனத்து இறைவனருள்பெற்றால் எல்லா மாயைகளையும் அறுத்தொழிக்கலாம்.

8. மாசற்ற கொள்கை மதிபோலத் தான்ருேன்றும்
ஈச னருள்பெற்றக் கால்.

உரை:—ஈஸ்வரனுடைய திருவருளை யடையப்பெற்ருல் குற்றமற்ற தன்மையானது சந்திரனொளியைப்போல தோன்றும்.

கருத்து:—இறைவன் திருவருளை யடைந்தால் நல்லுணர்வு பரிசுத்தமா யிருக்கும்.

9. ஆவாவென் ருேதி யருள்பெற்ருர்க் கல்லாது
தாவாதோ ஞான வொளி.

உரை:—ஆ ஆ என்று சொல்லி இறைவன் திருவருளைப் பெற்றவர்களுக் கல்லாமல் ஞானப்பிரகாசமானது சித்தியாகாதோ?

கருத்து:—திருவருளை யடைந்தவருக்கு ஞானவொளி கைகூடும்.

10. ஓவாச் சிவனருள் பெற்ரு லுரையின்றித்
தாவாத வின்பந் தரும்.

உரை:—ஒழியாத சிவபெருமானுடைய திருவருளை யடையப்பெற்ருல் சொல்லின்றி நீங்காத சுகானந்தத்தைக் கொடுக்கும்.

கருத்து:—பிரியாத அருளைப்பெற்றால் பிரியாத சிவ ஞான முண்டாகும்.

அருள் பெறுதல் முற்றிற்று.
ஆக செய்யுள் 10.

---

2. நினைப்புறுதல்

1. கருத்துறப் பார்த்துக் கலங்காம லுள்ளத்
திருத்திச் சிவனை நினை.

உரை:—மனதில் பொருந்தும்படிப் பார்த்து கலங்காமல் சிவபெருமானை உள்ளத்துள் வைத்து நினைப்பாயாக.

கருத்து:—மனதில் உறுதியாக அமைத்து சிவபெருமானைச் சிந்திக்கவேண்டும்.

2. குண்டலியி னுள்ளே குறித்தரனைச் சிந்தித்து
மண்டலங்கள் மேலாகப் பார்.

உரை:—குண்டலி சத்தியினுள்ளே நினைவை நினைத்து அங்கு சர்வேஸ்வரனைச் சிந்தித்து மும்மண்டலங்களையும் உயர்வாகப் பார்த்து தரிசிப்பாயாக.

கருத்து:—மூலாதார குண்டலி சத்தியைக் குறித்து மும்மண்டலங்களையும் தரிசிக்கவேண்டும்.

3. ஓர்மின்கள் சிந்தையி லொன்றச் சிவன்றன்னைப்
பார்மின் பழம்பொருளே யாம்.

உரை:—சிவபெருமானை சிந்தையில் பொருந்த நினையுங்கள்; தரிசனம் செய்யுங்கள்; இப்படி செய்யில் பழம்பொருளாகிய கடவுளாகக்கூடும்.

கருத்து:—சிவனை உள்ளத்தில் நினைந்து தரிசித்தால் கடவுளாகலாம்.

4. சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீசனை
 மிக்க மலத்தை விடு.

உரை:—சர்வேஸ்வரனை மனத்தின்கண் பலம்பொருந்த தெரிந்துக்கொள். அவ்வாறு செய்யில் மிகுந்த மாயா சம்பந்தமான மும்மலங்களையும் அகற்றிவிடுவாயாக.

கருத்து:—பரமேஸ்வரனைச் சிந்தித்தால் மும்மலங்களும் விலகிப் பரிசுத்த னாகலாம்.

5. அறிமின்கள் சிந்தையி லாதாரத் தைச்சேர்ந்
 துறமின்க ளும்முளே யோர்ந்து.

உரை:—ஆறுதாரங்களைச் சேர்ந்து மனத்தின் கண்ணே தெரியுங்கள். உமக்குள்ளே நன்கு ஆராய்ந்து சிவபெருமானை அடையுங்கள்.

கருத்து:—ஆறுதாரத்தைக்கொண்டு சிவபெருமானைத் தெரிந்து அவனருளை யடையுங்கள்.

6. நிற்றம் நினைந்திரங்கி நின்மலனை யொன்று
 முற்று மவனொளியே யாம். [விக்கில்

உரை:—அநுதினமும் மலரகிதனாகிய சிவபெருமானை மனமிரங்கிச் சிந்தித்துப் பொருந்தச் செய்தால், முழுதும் அந்த சிவபெருமானுடைய தேஜோமயமேயாகும்.

கருத்து:—எப்போதும் நின்மலனாகிய பரமேஸ்வரனைச் சிந்தித்தால் எல்லாம் சிவப்பிரகாசமேயாகும்.

விசேஷம்:—ஏகபோகமாய், நீயும் நானுமாய் என்பதாகும்.

7. ஓசையுணர்ந் தங்கே யுணர்வைப் பெறும்பரி
ஈசன் கருத்தா யிரு. [சால்

உரை:—சத்தத்தை யறிந்து உண்முகத்திலே உணர்ச்சியைப்பெற்ற தன்மையால் பரமேஸ்வரனுடைய நினைவாகவே இருப்பாயாக.

கருத்து:—சத்தத்தை யறிந்து அந்தர்முகத்திலே சதா சர்வேஸ்வரன் சிந்தனையாகவே யிரு.

8. இராப்பக லன்றி யிருசுடர்ச் சிந்திக்கில்
பராபரத்தோ டொன்றலு மாம்.

உரை:—இரவுபக லில்லாமல் சதா நேரமும் சந்திர சூரியாக்கினிகளாகிய முச்சுடர்களைச் சிந்திக்கில் பாராத வஸ்துவினிடத்தில் பொருந்தக் கூடும்.

கருத்து:—சதா நேரமும் அகத்தில் இருசுடரை சிந்தித்தால் அச் சிவபெருமானோடு கலந்திருக்கலாம்.

9. மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம்.

உரை:—உயர்வாகிய மனத்தால் அதிகமாக நினைந்து தியானம் செய்தால் ஒப்பற்ற சிவசொரூபத்தை யடையலாம்.

கருத்து:—நல்ல மனத்தால் உள்ளபடியே சிந்திக்கில் சிவசொரூபத்தை யடையலாம்.

10. வேண்டுவார் வேண்டும் வகைதான் விரிந்தெங்கும்
காண்டற் கரிதாஞ் சிவம்.

உரை:—வேண்டுவோர்கள் விரும்புகின்ற வகையாகப் பரவி எவ்விடத்திலும் சிவபெருமானைக் காணுதற்கு அரிய பொருளாகும்.

கருத்து:—எங்கும் பரவி நிற்கும் பராபர வஸ்துவைக் காண்பதற்கு அருமையாகும்.

நினைப்புறுதல் முற்றிற்று.
ஆக செய்யுள் 20.

---

3. தெரிந்து தெளிதல்

1. தேறித் தெளிமின் சிவமென்றே யுள்ளுணர்விற்
கூறிய பல்குணமு மாம்.

உரை:—உள்ளுணர்ச்சியில் சிவபெருமான் என்னும் வஸ்துவைச் சொல்லும் பல குணங்களிலும் கலந்துள்ளதென்று ஆராய்ந்து தெளிவடையுங்கள்.

கருத்து:—சிவபெருமான் பல குணங்களிலும் கலந்து விளங்கப்பட்டதென்று தெளிவாயாக.

2. உண்டில்லை யென்னு முணர்வை யறிந்தக்கா
கண்டில்லை யாகுஞ் சிவம். [ல்

உரை:—உண்டென்றும் இல்லையென்றும் சொல்லும் படியான உணர்ச்சியை அறிந்தால் சிவமென்னும் வஸ்து வானது கண்டும் காணாதுமான பொருளாகும்.

கருத்து:—இரண்டெனும் பொருளை உணர்ந்தக்கால் சிவமும் அவ்வாறே விளங்கும்.

3. ஒருவர்க் கொருவனே யாகுமுயிர்க் கெல்லாம்
ஒருவனே பல்குணமு மாம்.

உரை:—ஒருவருக்கொருவனா யிருக்கின்ற சிவபெரு மான் சகல ஆன்மாக்களுக்கெல்லாம் பல குணங்களிலும் கலந்த பொருளாகும்.

கருத்து:—பல குணங்களுடைய ஆன்மாக்களுக்கெல் லாம் ஒப்பற்ற சிவம் ஒன்றே ஆதாரமாக இருக்கப்பட்டது.

4. எல்லார்க்கு மொன்றே சிவமாவ தென்றுணர்
பல்லோர்க்கு முண்டோ பவம். [ந்த

உரை:—சர்வ ஆன்மாக்களுக்கும் சிவம் ஒன்றே பொதுவாக இருப்பதென்று உணர்ந்த சகலருக்கும் பிறவி அடையுமோ? அடையாது.

கருத்து:—ஈஸ்வரன் சர்வ வியாபி என்று அறிய வல் லார்க்கு இனி மறுஜென்ம மில்லை.

5. ஆயு மிரவியு மொன்றே யனைத்துயிர்க்கும்
ஆயுங்கா லொன்றே சிவம்.

உரை:—ஆராயும் சர்வ பிராணிகளுக்கும் சூரியன் ஒரு பொருளே யாகும். அதுபோல ஆராய்ந்து பார்த்தால் சர்வான்மாக்களுக்கும் சூரியன் ஒருவனே போன்று சிவமும் ஒன்றே யாகும்.

கருத்து:—சர்வான்மாக்களுக்குச் சூரியன் ஒருவனே போன்று சிவமும் ஒன்றே யாகும்.

6. ஓவாத தொன்றே பலவா முயிர்க்கெல்லாந்
தேவான தென்றே தெளி.

உரை:—என்றும் ஒழியாதிருக்கும் ஒப்பற்ற பொருளே பலவகைப்பட்ட ஆன்மாக்களுக் கெல்லாம் தெய்வமாயிருப்பதென்று தெளியடைவாயாக.

கருத்து:—என்றும் ஒழியாத ஒரு பொருளே சர்வான்மாக்களுக் கெல்லாம் பிரதானமானது.

7. தம்மை யறியாதார் தாமறிவோ மென்பதென்
செம்மையா லீசன் றிறம்.

உரை:—தம்மைத்தாமே யறிவதற்குச் சக்தி யில்லாத அறிவிலிகள் சர்வேஸ்வரனுடைய வல்லமையை உண்மையாக தாம் அறிவோ மென்பது ஏன்?

கருத்து:—தன் இலக்கணத்தை யறியாதவன் ஈஸ்வரன் இலக்கணத்தை யறிய மாட்டான்.

8. எல்லா வுலகத் திருந்தாலு மேத்துவர்கள்
நல்லுலக நாத னடி.

உரை:—எல்லா லோகங்களி லிருந்தாலும் நல்ல உலகத்திற்குக் காரணமாகிய இறைவனது திருவடிகளை வணங்குவார்கள்.

கருத்து:—ஞானிகள் எவ்வுலகத்தி லிருந்திடினும் கடவுள் திருவடிகளைத் துதிசெய்வார்கள்.

9. உலகத்திற் பட்ட வுயிர்க்கெல்லா மீசன்
நிலவுபோ னிற்கும் நிறைந்து.

உரை:—உலகங்களி லிருக்கின்ற ஆன்மாக்களுக்கெல்லாம் சர்வேஸ்வரன் வியாபகமாகி பூரணச் சந்திரனைப்போ லிருப்பான்.

கருத்து:—சர்வேஸ்வரன் சர்வான்மாக்க ளிடத்தும் வியாபித்திருக்கப்பட்டவன்.

விசேஷம்:—எல்லா வுலகங்களிலுமுள்ள உயிர்களோடும் ஈஸ்வரன் இருப்பான் என்க. இதனை,—

"எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிரா
யங்கங் கிருப்பதுநீ யன்றோ பராபரமே"

என்றருளிய தாயுமானவர் திருவாக்கா லறிக.

10. உலகத்தில் மன்னு முயிர்க்கெல்லா மீசன்
அலகிறந்த வாதியே யாம்.

உரை:—உலகின்கண் நிலைபெற்றிருக்கின்ற சர்வான் மாக்களுக்கும் சர்வேஸ்வரனை அளவு சொல்லக்கூடாத ஆதிவஸ்துவே யாம்.

கருத்து:—உலகத்திலுள்ள சகல உயிர்களுக்கும் சிவ பெருமானே முதற் பொருளாகும்.

தெரிந்து தெளிதல் முற்றிற்று.
ஆக செய்யுள் 30.

---

4. கலைஞானம்

1. சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்
முத்திக்கு மூல மது.

உரை:—பெண் ரூபமாகிய சந்திரனை ஆண் ரூபமாகிய சூரியன் ஊடுருவிக் கலந்தால், அந்த மார்க்கமானது மோட்சத்திற்குக் காரணமாகும்.

கருத்து:—சந்திரகலையும் சூரியகலையும் ஒன்று கூடுவதே சுழிமுனை. இதுவே மோட்ச வழிக்குக் காரணமாகும்.

விசேஷம்:—சந்திரகலையும் சூரியகலையும் ஒன்றாகக் கலந்தால் சுழிமுனையாகும். சுழிமுனையில் கும்பித்தால் சர்வேஸ்வரனுடைய சொரூபம் பிரகாசிக்கும். அந்தச் சிவ சொரூபமே மோட்சமாகும்.

2. அயனங்கொள் சந்திர னாதித்த னென்றில்
நயனமா முத்திக்கு வீடு. *

---

* 'நயனமா முத்திக்கு நாடு' என்றும் பாடபேத முண்டு.

உரை:—தட்சிணாயணம் உத்திராயணமென்று சொல்லப்பட்ட இரண்டு பிரிவைக் கொண்டிருக்கின்ற சந்திரகலையுடன் சூரியகலை பொருந்தி கூடினால் மோட்ச வீட்டைக் காணும் ஞானக்கண்ணாகும்.

கருத்து:—இருகலையும் ஒன்று யியங்கினால் சுழிமுனையென்னும் ஞானக்கண்ணே மோட்ச வீட்டை யடையக் காரணமாகும்.

நயனமென்பது:—கண், முக்கண், ஞானக்கண், அறிவு.

3. அஞ்சாலு மாயா வறம்பொரு ளின்பமுந்
துஞ்சா தவர்துறக்கு மாறு.

உரை:—பஞ்ச அவஸ்தைகளாலும் ஒழியாத தருமமும், பொருளும், இன்பமும் இறவாம லிருப்பவர்கள் விட்டு விடும் மார்க்கமாகும்.

கருத்து:—வீடு நீங்க மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் பிறவி யொழிந்தவர்கள் விடக்கூடியவைகளாகும்.

பஞ்ச அவஸ்தைகளாவன:—சாக்கிரம், சொப்பனம், சுழித்தி, துரியம், துரியாதீதம்.

1. சாக்கிரம்:—லலாடத்தானம்.
2. சொப்பனம்:—கண்டத்தானம்.
3. சுழுத்தி:—இருதய கமலம்.
4. துரியம்:—நாபிக் கமலம்.
5. துரியாதீதம்:—குறியிடம்.

4. ஈசனோ டொன்றி லிசையாய்ப் பொருளில்லை
தேச விளக்கொளியே யாம்.

உரை:—சர்வேஸ்வரனோடு கூடிவிட்டால் இனி கை கூடாத பொருள் ஒன்று மில்லையாம். எனெனில் அப்பொருளானது உலக விளக்குகளுக்குப் பிரகாசத்தைக் கொடுப்பதாகும்.

கருத்து:—இறைவன் தேசங்களுக்கெல்லாம் பிரகாசமாயிருப்பதால் அவனோடு ஒன்று கலந்து ஏகரூபமானவர்களுக்கு எல்லாப்பொருளும் கைகூடும்.

5. தாஞ்செய் வினையெல்லாந் தம்மை யறவுணரிற்
காஞ்சனமே யாகுங் கருத்து.

உரை:—தம்மை முழுதும் பற்றற உணர்ந்துக்கொண்டால், தம்மால் செய்யப்பட்ட வினை சம்பந்தங்களெல்லாம் ஒழிந்து மனமானது பொன்போலாகும்.

கருத்து:—தன்னைத்தான் அறிந்தவர்கள் எப்படிப்பட்ட வினைகளைச் செய்திருப்பினும் அவையெல்லாம் ஒழிந்து கலங்கமற்ற பொன்போன்ற மனத்தை யுடையராவார்கள். காஞ்சனம் - பொன்.

6. கூடக மான குறியெழுத்தைத் தானறியில்
வீடக மாகும் விரைந்து.

உரை:—சரீர முண்டாகிய அறிகுறியா யிருக்கின்ற எழுத்தை அறிவால் அறிந்தால் சீக்கிரமாக மோட்சவீட்டை யடையலாம்.

கருத்து:—சரீர மெடுத்ததற்குக் காரணமான அடையாள அட்சரத்தை யுணர்ந்திடில் மோட்சை வீட்டைக் கொடுக்கும்.

7. வீடக மாக விழைந்தொல்லை வேண்டுமேற்
கூடகத்திற் சோதியோ டொன்று.

உரை:—மோட்சமடைய ஆசைப்பட்டு சீக்கிரமாக விரும்வார்களானால் கூடப் பிரமத்தினுடன் கலந்திடுவாயாக.

கருத்து:—மோட்சமடைய விரும்புவோர்கள் கூடப் பிரமத்தினுடன் கலந்திட வேண்டும்.

8. பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்த தாகுங் கருத்து.

உரை:—எங்கும் வியாபகமான சிவபெருமானோடு கூடினால் மனம் பெருமை யுடைய தாகும்.

கருத்து:—எங்கும் வியாபித்திருக்கும் இறைவனுடன் கலந்தால் மனமானது பரிசுத்த முடையதாகும்.

9. இரேசக மாற்றி யிடையறாதே நிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம்.

உரை:—இரேசகத்தைச் செய்து இடையில் விடாமலிருந்தால் சிவபெருமான் உள்ளே நிறைந்து விளங்கப் பட்டவனாவான்.

கருத்து:—கிரமப்படி இரேசகத்தைச் செய்யில் பூரகத்தில் சிவன் உள்ளே நிறைந்திருப்பவனுவான்.

10. சிந்தையில் நின்ற நிலைவிசும்பிற் சாக்கிரமாம்
சந்திரனிற் றேன்று முணர்வு.

உரை:—மனதில் உண்டாகிய உண்மையினுல் ஆகாயத்தில் ஜாக்ராவஸ்தையாகும். அவ்வுணர்ச்சியானது சந்திர கலையில் வெளிப்படும்.

கருத்து:—மனநிலை யுண்மையானது சாக்கிராவஸ்தையில் சந்திரகலையில் உணர்ச்சி ரூபமாகத் தோன்றும்.

கலைஞானம் முற்றிற்று.
ஆக செய்யுள் 40.

---

5. உருவொன்றி நிற்றல்

1. எள்ளகத்தெண்ணெ யிருந்ததனை யொக்குமே
உள்ளகத் தீச னொளி.

உரை:—மனதிலிருக்கும் சர்வேஸ்வரனுடைய பிரகாசமானது எள்ளினிடத்து எண்ணெய் வியாபித்திருப்பதற் கொப்பாகும்.

கருத்து:—எள்ளுக்குள் எண்ணெய் கலந்திருப்பது போன்று சர்வேஸ்வரன் எல்லா உயிர்களிடத்தும் வியாபித்திருப்பன்.

2. பாலின்க ணெய்போற் பரந்தெங்கு நிற்குமே
நூலின்க ணீச னுழைந்து.

உரை:—சர்வேஸ்வரனானவன் நூலின்கண்ணே கலந்து நுழைந்து, பாலின்கண் நெய்போல எங்கும் பரவி யிருப்பான்.

கருத்து:—பாலினுள் நெய் கலந்திருப்பது போன்று சர்வேஸ்வரன் எல்லா ஆன்மாக்களிடத்தும் கலந்திருப்பவனாகும்.

விசேஷம்:—நூல் என்பது சரநூலென்றும், சுவாசமென்றும் சொல்லப்படும்.

3. கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யும்
இரும்புண்ட நீரு மியல்பு.

உரை:—கரும்பினிடத்து வெல்லமும், காயும், பாலினிடத்து நெய்யும், இரும்பினால் உண்ணப்பட்ட ஜலமும் இறைவனுடைய இலட்சணங்களாகும்.

கருத்து:—சர்வேஸ்வரனுடைய லட்சணங்கள் கரும்பு, பால், இரும்பு முதலியவைகளி லிருக்கும் தன்மை யொத்ததாகும்.

4. பழத்தி னிரதம்போற் பரந்தெங்கு நிற்கும்
வழுத்தினு லீச னிலை.

உரை:—சர்வேஸ்வரனுடைய உண்மை நிலையைத் துதி செய்யுங்கால் பழத்தினுடைய இரசத்தைப்போல் எங்கும் வியாபித்திருக்கும்.

கருத்து:—இறைவன் வியாபகமானது பழத்தினுள் இரசத்தைப்போல் சர்வான்மாக்களிடத்தும் பொருந்தி நிறைந்திருக்கும்.

5. தனுவொடு தோன்றுமே தானெல்லா மாகி
யணுவதுவாய் நிற்கு மது.

உரை:—தானே எல்லாப் பொருள்களாகியும், அணுரூபமாயும் நிற்கும். அப்பொருளானது இந்த தேகத்துடனேயே யுண்டாகும்.

கருத்து:—எல்லாப் பொருள்களாகியும், அணுவாகியும் நிற்கும் பொருளானது, இந்த தேகத்துடனேயே உற்பத்தியாகும்.

6. வித்து முளைபோல் விரிந்தெங்கு நிற்குமே
ஒத்துளே நிற்கு முணர்வு.

உரை:—மனதினுள்ளே ஒத்து விளங்கும் உணர்ச்சியானது, விதையையும் முளையையும்போல் எங்கும் விரிந்து கலந்து நிற்கும்.

கருத்து:—சர்வேஸ்வரன் சகல உயிர்களிலும் வித்தும் முளையும்போல் கலந்திருப்பான்.

7. அச்ச மாங்கார மகத்தடக்கி னற்பின்னை
நிச்சயமா மீச னிலை.

உரை:—பயத்தையும் அகங்காரத்தையும் மனதினில் அடக்கினல் பிறகு தலைவனுடைய உண்மை நிலையானது உண்மையாக விளங்கும்.

கருத்து:—பயத்தையும் அகங்காரத்தையும் அடக்கின வர்களுக்கே ஈஸ்வரனுடைய குணம் நன்கு விளங்கும்.

8. மோட்டினீர் நாற்ற மூளைமுட்டை போலுமே
 வீட்டுளே நிற்கு மியல்பு.

உரை:—நமது சரீரத்திற் குள்ளிருக்கும் இயல்பானது, மோட்டிலே நீர் நாற்றத்தையுடைய மூளை மூளைக்கின்ற எருமுட்டை போலுமாம்.

கருத்து:—சரீரத்திற் குள்ளிருக்கும் தன்மையானது நீர்நாற்ற முடைய எருமுட்டை போலாம்.

9 நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நி
 அனைத்துயர்க்குந் தாஞ மவன். [ற்கும்

உரை:—எல்லா உயிர்களுக்கும் ஒருவஞ யிருக்கின்ற சர்வேஸ்வரன், தன்னை உண்மையாக நினைக்கப்பட்டவர்க ளுடைய மனதினுள்ளே பரிசுத்தனாக இருப்பான்.

கருத்து:—சர்வேஸ்வரன் தன்னை உண்மையாக சிந்திப் பவர்கள் இருதய கமலத்தில் பரிசுத்தனாக விளங்குவான்.

10. ஓசையி னுள்ளே யுதிக்கின்ற தொன்றுண்டு
 வாசமலர் நாற்றம்போல் வந்து.

உரை:—வாசனை பொருந்திய மலரின் சுகந்தத்தைப் போன்று வந்து சத்தத்தினுள்ளே தோன்றுவது ஒரு வஸ்து உண்டு.

கருத்து:—சத்தத்தினுள்ளே பூவின் மணம்போல வந்து தோன்றும் பொருள் ஒன்றுளது.

உருவொன்றி நிற்றல் முற்றிற்று.
ஆக செய்யுள் 50.

---

6. முத்தி காண்டல்

1. மனத்தோ டுறுபுத்தி யாங்காரஞ் சித்தம்
அனைத்தினு மில்லை யது.

உரை:—மோட்சமானது மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கினுள்ளும் இல்லை.

கருத்து:—கரணம் நாலிலு மோட்ச மில்லை.

2. வாக்குங் கருத்து மயங்குஞ் சமயங்கள்
ஆக்கிய நூலினு மில்.

உரை:—வாக்கும் மனமும் மயங்குகின்ற சமயங்களை உண்டாக்கின சாஸ்திரங்களிலு மில்லை.

கருத்து:—எந்த நூல்களிலும் வசனமும் எண்ணமும் மயங்குகின்ற சமயங்களைக் கூறவில்லை.

3. உருவமொன் றில்லை யுணர்வில்லை யோதும்
அருவமுந் தானதுவே யாம்.

உரை:—ஒரு உருவமு மில்லை; உணர்ச்சியு மில்லை; சொல்லப்பட்ட அருவப்பொருளும் அதுவே யாகும்.

கருத்து:—ரூபமும் உணர்வும் இல்லாதது அருவமேயாம். அதை யறிவதே மோட்சங் காண்டலாகும்.

4. தனக்கோ ருருவில்லை தானெங்கு மாகி
மனத்தகமாய் நிற்கு மது.

உரை:—அந்த வஸ்துவுக்கு ஓர் உருவமு மில்லை. தான் எவ்விடத்தும் வியாபகமாகி மனதுக்குள்ளே கலந்து நிற்கும்.

கருத்து:—இறைவன் எங்கும் வியாபகமாகி அன்பர்கள் மனத்துள்ளே உறவாய் நிலைபெற் றிருப்பன்.

5. பெண்ணா ணலியென்னும் பேரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு.

உரை:—அப் பொருளினுடைய தன்மையானது பெண் என்றும் ஆண் என்றும் அலி என்றும் வழங்குகின்ற பேர் ஒன்றேனும் இல்லாததாய் ஆகாயமா யிருக்கும்.

கருத்து:—இறைவன் பெண், ஆண், அலியென்ற நாமமின்றி ஆகாயமா யிருப்பான்.

6. அனைத்துருவ மாய வறிவை யகலில்
நினைத்துணையு மில்லை சிவம்.

உரை:—எல்லா உருவங்களு மாகின்ற அறிவை விட்டால் சிவமானது நினையளவு மில்லையாகும்.

கருத்து:—ரூபங்க ளெல்லாவற்றையு மடையும்; அறிவைவிட்டால் சிவமில்லை.

விசேஷம்:—சிவபெருமான் அறிவே திருமேனியாக வுடையவன் ஆதலின் 'அறிவை யகலின் றினைத்துணையு மில்லை சிவம் என்றார். இதனை, 'சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே' என்ற தாயுமானவர் வாக்கும் வலியுறுத்தும்.

7. துணிமுகத்துக் காதியாத் துன்னறி வின்றி
அணிதா ரிரண்டு விரல்.

உரை:—வருந்துகின்ற முகத்துக்கு முதன்மையாக நெருங்கிய அறிவில்லாமல் அணிதாரா யிருப்பது இரண்டு விரலாகும்.

கருத்து:—முகத்திற்கு அறிவின்றி அணிதாரா யிருப்பது இரண்டு விரல்.

8. மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டங் காதி நிலை.

உரை:—ஒரு மயிர் முனையில் பாதியளவு மனத்தினிடத்தில் அன்பு இருக்குமாகில் அவ்விடத்தில் ஆதிவஸ்துவின் உண்மை நிலையானது அயிர்ப்புண்டாகும்.

கருத்து:—மயிர் முனையில் பாதியளவு அன்பிருக்கில் முத்தி சித்தியாகும்.

9. தற்பர மான சதாசிவத்தோ டொன்றில்
உற்றறி வில்லை யுயிர்க்கு.

உரை:—ஞானபரமாகிய சதா சிவத்துடன் கலந்தால் ஆன்மாவுக்குப் பொருந்திய அறிவு இல்லையாம்.

கருத்து:—எப்போதும் சிவத்தோடு கலந்திருந்தால் அறிவுக்குப் பொருந்திய சொந்த அறிவு இல்லையாகும்.

10. உறக்க முணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.

உரை:—தூக்கமும் உணர்ச்சியும் பசியும் கெடப்பட்டால் ஜென்மங்களில் பிறக்க வேண்டியதில்லை.

கருத்து:—நித்திரை முதலியவை கேடுண்டால் இனி பிறவி இல்லாததாகும்.

முத்தி காண்டல் முற்றிற்று.
ஆக செய்யுள் 60.

7. உருபாதீதம்

1. கருவின்றி வீடாங் கருத்துற வேண்டில்
உருவின்றி நிற்கு முணர்வு.

உரை:—மறுபிறவியாகிய கருவில்லாமல் மனஞ் சம்மதிக்குமானல் உணர்ச்சியானது உருவில்லாமல் அரூபமாகவிருக்கும்.

கருத்து:—பிறவியைக் கருதாமல் மோட்சமடைய விரும்பினுல் உணர்வானது உருவில்லாமல் நிற்கும்.

2. பிறத்தலொன் றின்றிப் பிறவாமை வேண்டில்
அறுத்துருவ மாற்றி யிரு.

உரை:—பிறத்த லொன்றில்லாமல் பிறவா நெறியை வேண்டினால் ரூபத்தை யறுத்து வேறு படுத்தி யிருப்பாய்.

கருத்து:—ஜென்மவினையை யொழிக்க வேண்டுமானால் பத்தி வேறுபடுத்தி யிருக்கவேண்டும்.

3. உருவங்க ளெல்லா மறுத்துற மாற்றில்
கருவேது மில்லை தனக்கு.

உரை:—உருவங்க ளெல்லாம் நீக்கி முழுமையும் மாற்றினால் உயிருக்கு எந்த ஜென்மமு மிராது.

கருத்து:—ரூபங்களை யொழித்தால் பிறகு பிறப்பில்லை.

4. கறுப்பு வெளுப்பு சிவப்புறு பொன்பச்சை
யறுத்துறுவ மாற்றி யிரு.

உரை:—கறுப்பு, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை என்னும் ரூபங்களை நீக்கி வேறு சிவ சொரூபத்தைப் பெற்றிரு.

கருத்து:—வர்ண பேதங்களை நீக்கி வேறு சிவ பேதத்தை யடைய வேண்டும்.

5. அனைத்துருவ மெல்லா மறக்கெடுத்து நின்றா
பினைப்பிறப் பில்லையாம் வீடு. [ல்

உரை:—சகல உருவங்களை யெல்லாம் முழுமையுங் கெடுத்திருந்தால் பிறகு ஜென்ம மேற்படுவ தில்லை; மோட்ச முங் கிடைக்கும்.

கருத்து:—சகல உருவங்களை அறவே யொழித்தால் மோட்சங் கிடைக்கும்.

6. நினைப்பு மறப்பற்று நிராகரித்து நின்றால்
தனக்கொன் றுமில்லை பிறப்பு.

உரை:—நினைப்பும் மறுப்பும் நீங்கி நிராகரித்திருந்தால் தனக்கு ஒரு பிறப்பும் இல்லை.

கருத்து:—நினைப்பு மறப்பு அற்றவர்கட்குப் பிறவியில்லை.

7. குறித்துருவ மெல்லாங் குறைவின்றி மாற்றில்
மறித்துப் பிறப்பில்லை வீடு.

உரை:—கூறும்படியான ரூபங்களையெல்லாம் யாதொரு குறைவு மில்லாமல் வேறு படுத்தினால் இறந்து மறு ஜென்ம மடைவதில்லை; மோட்ச முண்டாகும்.

கருத்து:—ரூபங்களை மாற்றினால் பிறவியின்றி மோட்ச முண்டாகும்.

8. பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு.

உரை:—பிதற்றும்படியான உணர்ச்சியை யொழித்து உலக பேதத்தை அறிந்துகொள்வதே மோட்சமாகும்.

கருத்து:—ஆபாச உணர்ச்சியை நீக்கி உலக இன்பத்தை யறிவதே மோட்சமாகும்.

9. பிறப்பறுக்க வீடாம் பேருவமை யின்றி
அறுத்துருவ மாற்றி யிரு.

உரை:—பெரிய ஒப்புவமை யில்லாமற்படி சகல உருவங்களையு மகற்றி மாறுதல் செய்திருந்தால் வரும் ஜென்மத்தை யொழிக்கும்படியான மோட்ச முண்டாகும்.

கருத்து:—சர்வ உருவங்களையும் நீக்கி மாறுதல் செய்திருந்தால் பிறவியின்றி மோட்சத்தைக் கொடுக்கும்.

10. ஓசை யுணர்வோ டுயிர்ப்பின்மை யற்றக்கால்
பேசவும் வேண்டா பிறப்பு.

உரை:—ஓசையையும், உணர்ச்சியையும், பெருமூச்சில்லாமையையும் ஒழித்தால் ஜென்ம முண்டென்று பேச வேண்டியதே யில்லை.

கருத்து:—ஓசை முதலியவைகள் நீங்கிய காலத்துப் பிறப்பென்பது இல்லையாம்.

உருபாதீதம் முற்றிற்று.
ஆக செய்யுள் 70.

---

8. பிறப்பறுதல்

1. தன்னை யறிவு மறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

உரை:—தன்னைத்தானே யறிகின்ற உணர்ச்சியைப் பெற்றால் பிறகு பிறவி யெடுப்பதில்லை; மோட்ச முண்டாகும்.

கருத்து:—தன்னைத்தா னறிந்தால் மோட்ச முண்டாகும்.

விசேஷம்:—தன்னைத்தா னறிந்தால் இன்ப மடையலா மென்பதனை "தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே, ஒரு தந்திரஞ் சொல்ல வேண்டும் வெண்ணிலாவே" என்றும் இராமலிங்க சுவாமிகள் அருளிய வாக்கா லறியலாம்.

2. அறம்பாவ மாயு மறிவுதனைக் கண்டால்
பிறந்துழல வேண்டா பெயர்ந்து.

உரை:—தருமத்தையும் பாவத்தையும் ஆராயும்படியான உணர்ச்சியைத் தெரிந்தால் பல தடவை ஜென்மித்து உழல வேண்டியதில்லை.

கருத்து:—புண்ணிய பாவங்களை யுணர்ந்தவர்கள் பிறந் துழல வேண்டியதில்லை.

3. சிவனுருவந் தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து.

உரை:—சிவபெருமானுடைய சொரூபமே தன்னு டைய ரூபமாக கலந்து அடங்கி யிருந்தால் விரும்பிய பாவம் நாசமாகி பிறப்பறும்.

கருத்து:—தானே சிவ சொரூபமானால் பிறவி யில்லை யாகும்.

4. உறக்க முணர்வோ டுயிர்ப்பின்மை யற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம்.

உரை:—நித்திரையும், உணர்ச்சியும், பெருமூச்சில்லாமையும் நீங்கினால் பிறவி யில்லாமல் உயர்வாகிய மோட்சமுண்டாகும்.

கருத்து:—நித்திரை முதலியவைகளை யொழித்தவர்கட்கு ஜெனன மின்றி மோட்ச முண்டாகும்.

5. நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றால்
அனைத்துலகும் வீடா மது.

உரை:—நினைத்தலும், மறத்தலும், பசியும் அற்றக்கால் எல்லா உலகங்களும் மோட்ச வீடாகும்.

கருத்து:—நினைவு மறதி பசியற்றால் தோற்றமான விடமெல்லாம் மோட்ச வீடாகும்.

6. உடம்பிரண்டுங் கெட்டா லுறுபய னொன்றுண்டு
திடம்படு மீசன் றிறம்.

உரை:—ஸ்தூல சூக்கும சரீர மிரண்டுங் கெட்டால் வரும்படியான பிரயோஜன மொன்றுண்டு. அதாவது சர்வேஸ்வரனுடைய வல்லமை திடமுண்டாகும்.

கருத்து:—ஸ்தூல சூக்கும தேகங்களாகிய விரண்டுங் கெட்டால் இறைவனருள் உண்டாகும்.

7. தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

உரை:—தன்னைத்தானறிந்து நின்றடங்கி தானென்னும் அகங்காரத்தை நீக்கினால் பிறகு ஜென்ம மில்லாமல் மோட்சமுண்டாகும்.

கருத்து:—தன்னை யறிபவனுக்குப் பிறப்பின்றி மோட்ச முண்டாகும்.

8. மருளன்றி மாசறுக்கின் மாதூ வெளியாய்
இருளின்றி நிற்கு மிடம்.

உரை:—மயக்க மின்றி குற்றங்களைக் களைந்தால் மகத்துவ பிரகாச மயமாய் அஞ்ஞான மில்லாமல் இருக்கும் இடமாகும்.

கருத்து:—மாயா சம்பந்தத்தை யொழித்தால் மோட்ச பூமி கிடைக்கும். மருள் - மயக்கம்.

9. விகாரங் கெடமாற்றி மெய்யுணர்வு கண்டால்
அகாரமாங் கண்டீ ரறிவு.

உரை:—மனோ விகாரங்கள் ஒழியும்படியாக மாற்றி உண்மையாகிய உணர்ச்சியைப் பார்த்தால் அறிவானது அகாரமாகும்.

கருத்து:—மனதில் விகாரங்க ளற்றவர்களது பேரறிவு ஞானமயமாகும். ஞானம் - மோட்சம்.

10. சிந்தை யாங்காரஞ் செறிபுல னற்றக்கால்
முந்தியே யாகுமாம் வீடு.

உரை:—சிந்தித்தலும், அகங்காரங்களும், நெருங்கிய ஐம்புலன்களும் விலகினால் மோட்சமானது முன்னதா யுண்டாகும்.

கருத்து:—காரணம் ஐம்புலனும் சுட்டறுத்தால் சீக்கிரத்தில் மோட்ச முண்டாகும்.

பிறப்பறுதல் முற்றிற்று.
ஆக செய்யுள் 80.

---

9. தூயவொளி காண்டல்

1. தோன்றிய தெல்லாந் தொடக்கறுத்துத் தூ
தோன்றியக்காற் றூய வொளி. [வெளியாய்த்

உரை:—காணும்படியான எல்லாவற்றையும் தொடக்கறுத்துப் பரிசுத்த பிரகாசமாகக் காணப்பட்டால் ஞானம் பிரகாசமாகும்.

கருத்து:—குற்றங்களைந்து சுத்த வெளியைக் காணப்பட்டால் ஞானம் உதயமாகும்.

2. தெளிவாய தேச விளக்கொளியைக் காணில்
வெளியாய வீட துவே யாம்.

உரை:—தெளிவையுடைய அந்தர்முக தீயப் பிரகாசத்தைத் தெரிசனஞ் செய்தால் எல்லோராலும் வெளிப்படையாக எற்றுக் கொள்ளக்கூடிய மோட்சம் அதுவே யாகும்.

கருத்து:—உள்ளத்தில் காணப்படும் பிரகாசமே மோட்சமாகும்.

3. மின்போ லுருவ விளக்கொளிபோல் மேற்கா
முன்போல மூலம் புகும். [ணில்

உரை:—மின்னலைப்போன்ற சொரூபத்தை மேலிடத்தில் தீபப் பிரகாசம்போல காணப்படில் அது முன்போல மூலாதாரத்தில் புகுவதாகும்.

கருத்து:—ஆறாதாரத்தில் விளங்கும் ஞானப்பிரகாசமே மோட்சமாகும்.

4. பளிங்கு வலம்புரி பானிறத்த தாகில்
துளங்கொளியாந் தூய நெறி.

உரை:—பளிங்கையும், வலம்புரிச் சங்கையும், பாலையும் ஒப்பானதானால் பரிசுத்தமுடைய சன்மார்க்கமானது விளங்குந் தேஜோ மயத்தை யுடையதாகும்.

கருத்து:—அந்தர் முகத்தில் வெண்மை நிறம் காணப்படில் மார்க்கமானது தேஜோ மயத்தை யடையும்.

5. சங்கு நிறம்போற் றவள வொளிகாணில்
அங்கையி னெல்லியே யாம்.

உரை:—சங்கினுடைய நிறத்தைப்போன்று வெண்மையான பிரகாசத்தைத் தெரிசித்தால் மோட்சம் உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனி போலாகும்.

கருத்து:—வெண்மைநிற தெரிசனமே மோட்சத்திற்குக் கரதலாகமலம் போலாகும்.

6. துளங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து.

உரை:—தூண்டுகோ லில்லாமற்படிதானே பிரகாசித்து விளங்கப்பட்ட தேஜோமய பிரகாசத்தைத் தெரிசித்தால் சீக்கிரமாக விளக்கமுடைய மோட்ச முண்டாகும்.

கருத்து:—உள்ளகத்தே தூண்டா விளக்கின் ஜோதியைத் தெரிசித்தால் விரைவில் மோட்ச முண்டாகும்.

7. மின்மினி போன்ற விளக்காகத் தான்றோன்றில்
அன்னப் பறவையே யாம்.

உரை:—மின்மினிப் பூச்சைப்போன்ற தீபப் பிரகாச தேஜோமயம் காணப்பட்டால் அன்னப் பட்சியைப்போல் உண்மையை உணரக் கூடும்.

கருத்து:—உள்ள தெரிசனத்தால் உண்மையைத் தெரியக்கூடும்.

விசேஷம்:—அன்னப்பட்சிக்குப் பாலையும் நீரையும் பிரிக்கும் தன்மை யுடையதால் 'அன்னப்பறவையே யாம்' என்றார்.

8. உள்ளொளி தோன்றி லுணரி லருளொளி
அவ்வொளி யாதி யொளி.

உரை:—அந்தர்முக பிரகாசமானது வந்து காணப்பட்டால் திருவருட் பிரகாசமானது அந்த பிரகாசமே யாகும். அதுவே மோட்சத்திற்கு மூலதரிசன பிரகாசமாகும்.

கருத்து:—உள்ளக வொளியே மோட்சமாகும்.

9. பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணில்
பரம்பரமே யாய வொளி.

உரை:—எங்கும் பரவி யிருக்கின்ற ஆகாயத்தில் வியாபித்திருக்கின்ற தேஜோ மயத்தைக் கண்டால், அந்த தேஜோமயப் பிரகாசமே சிவபெருமானாகும்.

கருத்து:—இறைவனும் மோட்சமும் ஞானப்பிரகாசமே யாகும். விசும்பு - ஆகாயம்.

10. ஆதி யொளியாகி யாள்வானுந் தானாகி
ஆதி யலனுருவ மாம்.

உரை:—முதற் பொருளான கடவுளானவன் ஞானப் பிரகாச முடையவனாகியும், தானே ஆண்டருள் செய்வானாகியும் ஆவது, ஆதியிலிருந்து அவனுடைய சொரூபமே யாம்.

கருத்து:—எல்லாம் சிவ சொரூபமே யாகும்.

தூயவொளி காண்டல் முற்றிற்று.

ஆக செய்யுள் 90.

10. சதாசிவம்

1. பத்துத் திசையும் பரந்த கடலுலகும்
ஒத்தெங்கும் நிற்குஞ் சிவம்.

உரை:—சிவ சொரூபமானது பத்துத்திசையும் பரவி யிருக்கப்பட்ட சமுத்திர முதல் எல்லா வுலகங்களிலும் பொருந்தியதாய், எவ்விடத்திலும் வியாபித்திருக்கும்.

கருத்து:—சிவ சொரூபமானது எங்கும் வியாபித்திருக்கும்.

விசேஷம்:—'எங்கும் நிற்கும் சிவம்' என்றதை,

"அங்கிங் கெனுதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தி யாகி"

என்னும் தாயுமானவர் வாக்கோ டொப்பு நோக்கற்பாலது. அன்றியும், திருவருளேயே துணையாகக்கொண்டு யாண்டுங் காணப் படுவன வனைத்தும் சிவமே யாகவும், பிறிதொன் றின்றாகவும் காண்க. இதனை,

"பார்ப்பன வெல்லாம் பரமா யறிதல்
சீர்படு பேரறி வுடையோர் திறனே"

என்பதனுலும்,

"நவிலுங்கால் மேல்கீழ் நடுப்பக்க மெங்கும்
சிவமொழிய வேறில்லை தேர்"

என்பதனுலு மறிக.

2. விண்ணிறைந்து நின்று விளங்குஞ் சுடரொ
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம். [ளிபோல்

உரை:—ஆகாயத்தில் பரவியிருந்து விளங்கும் சூரியப் பிரகாசம்போல், சிவப்பிரகாசமானது உள்ளக இருதய கமலத்தில் நிறைந்து கலந்து வியாபிக்கும்.

கருத்து:—சிவபெருமான், பகிர்முக சூரியப்பிரகாசம் போன்று ஆன்ம கோடிகளின் அந்தர்முக இருதய பீடத்தில் பொருந்தி விளங்குவானுகும்.

3. ஆகமுஞ் சீவனு மாசையுந் தானாகி
ஏகமாய் நிற்குஞ் சிவம்.

உரை:—சிவமானது சரீரமும், உயிரும், ஆசையும் தானே யாகி ஒன்றாக விளங்கும்.

கருத்து:—சிவப்பொருளானது சரீரமாகி, சரீரத்திற்கு ஆன்மாவாகி, இரண்டிற்கும் பொருந்திய ஆசையாகி ஆராயுங்கால் ஒன்றே யெல்லாமாய் விளங்கும். ஏகம் - ஒன்று.

4. வாயுவாய் மன்னுயிராய் மற்றவற்றி னுட்பொ
ஆயுமிடந் தானே சிவம். [ருளாய்

உரை:—காற்றாகியும், நிலைபெற்ற உயிராகியும், இன்னும் அவற்றின் உட்பொருளாகியும் ஆராயுமிடமே சிவமாகும்.

கருத்து:—எப்பொருள்க ளிடத்தும் ஆராயுமிடமே சிவமாகும்.

5. எண்ணிறைந்த யோனி பலவாய்ப் பரந்தெங்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம். [கும்

உரை:—அளவு சொல்லக்கூடாத யோனிகளில் பலபல விதமாகப் பரவி எவ்விடத்திலும் சிவப்பொருளானது உள்ளகத்தே வியாபித்திருக்கும்.

கருத்து:—சிவமானது பலபல யோனிகளிலும் பலபல விதமாகப் பரவி விளங்கும்.

6. ஒன்றேதா னூழி முதலாகிப் பல்லுயிர்க்கும்
ஒன்றாகி நிற்குஞ் சிவம்.

உரை:—ஒரு வஸ்துவே ஊழிக்கால முதலாக பல உயிர் களுக்கும் சிவபெருமான் ஒரு பொருளாகவே கலந்திருப் பான்.

கருத்து:—சகல ஆன்மாக்களிலும் ஒரு பொருளாகிய சிவபெருமான் கலந்திருப்பான்.

7. மூலமொன் ருகி முடிவொன்ரு யெவ்வுயிர்க்கு
காலமாய் நிற்குஞ் சிவம். [ம்

உரை:—ஆதியெனும் ஒரு பொருளாகியும், முடி வெனும் ஒரு பொருளாகியும், எல்லா ஆன்மாக்களும் கால மாகவும் சிவபெருமான் விளங்குவார்.

கருத்து:—ஆதியும் அந்தமும் இடையே காலமுமாக இருப்பவன் சிவபெருமான் ஒருவனே.

8. மண்ணிற் பிறந்த வுயிர்க்கெல்லாந் தானுகி
விண்ணகமே யாகுஞ் சிவம்.

உரை:—சிவமெனும் பொருள் உலகின்கண் ணுண் டான ஆன்மாக்களுக்கெல்லாம் தானே காரணப் பொரு ளாகி ஆகாய சஞ்சாரியாய் விளங்கப்பட்டதாகும்.

கருத்து:—இறைவனுனவன் உலகத்திலுள்ள ஆன்ம கோடிகளின் மனவெளியில் சஞ்சரிப்பவனுகும்.

9. தோற்றமது வீடாகித் தொல்லைமுத லொன்ரு
ஏத்தவரு மீச னுளன். [கி

உரை:—உற்பத்தியே வீடாகவும், ஆதிமுதல் ஒரே பொருளாகியும் துதிசெய்யப்பட்டு வருகின்ற சர்வேஸ்வரன் உள்ளத்தி லிருக்கப்பட்டவனாகும்.

கருத்து:—உற்பத்தி முதல் முடிவுவரையில் சிவமயமே யாம்.

விசேஷம்:—உளன் என்பது உள்ளன்; உள்ளத்தி னுள்ளே இருக்கப்பட்ட சிவபெருமான்.

10. நிற்கும் பொருளும் நடப்பனவுந் தானாகி
உற்றெங்கும் நிற்குஞ் சிவம்.

உரை:—நிற்கின்ற பொருளும், நடக்கின்ற பொருளும் தானே யாகி எங்கும் பொருந்தி யிருக்கப்பட்டது சிவ பொருளாகும்.

கருத்து:—இருப்பதிலும் நிகழ்வதிலும் சிவபெருமான் கலந்திருப்பான்.

சதாசிவம் முற்றிற்று.

ஆக செய்யுள் 100.

இரண்டாவது திருவருட்பால் முற்றிற்று.

ஆக பால் 2-க்குச் செய்யுள் 200.

மூன்றவது
தன்பால்

1. குருவழி

1. தன்பா லறியுந் தவமுடையார் நெஞ்சகத்துள்
அன்பா யிருக்கு மரன்.

உரை:—தனக்குரிய விஷயாதிகளை யறிகின்ற தவத்தை யுடையவர்களது மனத்தினுள்ளே சிவபெருமான் அன்புடனே எழுந்தருளி யிருப்பான்.

கருத்து:—சர்வேஸ்வரன் தன்னைத்தானறிந்த தவசிரேஷ்டர்களின் மனத்தில் வீற்றிருப்பவனாகும்.

2. சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித் திருக்குஞ் சிவம்.

உரை:—தன் மனதையே சிவமாகப் பாவித்து காண்பவர்களுடைய மனத்தின் கண்ணே சிவசொரூபம் சிந்தித் திருக்கும்.

கருத்து:—மனதையே சிவமென்று கருதுவோருக்குச் சிவபெருமான் மனத்தினுறு நினைவாகவே இருப்பன்.

3. குருவி னடிபணிந்து கூடுவ தல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

உரை:—ஞானாசிரியனுடைய பாதங்களை வணங்கி சேராதவர்களுக்குச் சிவமானது அருவமா யிருக்கும்.

கருத்து:—குருவடியை வணங்கி வழிபடுவோர்க்கே சிவம் தோற்றமாகும்.

4. தலைப்பட்ட சற்குருவின் சன்னதியி லல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்.

உரை:—உயர்ந்த ஞானசிரியனுடைய திருச் சந்நிதானத்தின் முன்னே யல்லாமல் வழியி லகப்பட்ட மானதுவே யாகும்.

கருத்து:—ஞானசிரியர் சந்நிதானத்தில் வழிபடவேண்டும்.

5. நெறிப்பட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிறிவற் றிருக்குஞ் சிவம்.

உரை:—ஞானவழியிற் சேர்ந்த நல்ல குருமூர்த்தியானவர் உண்மையான வழியை உபதேசித்தால் சிவம் பிறிவின்றி கலந்திருப்பான்.

கருத்து:—சற்குருவி னுபதேசத்தால் சிவம் பிறிவற்றிருக்கும்.

விசேஷம்:—ஞானசூரியன் - அறிவு.

"அறிவே குருவாகில்-அது மிஞ்சும் இது கெஞ்சம்" என்பதனு லறிக.

6. நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லை யில்லாத சிவம்.

உரை:—நன்மையாகிய பல நூல்களைக் கற்றாலும், அளவு சொல்லப்படாத வியாபகங்கொண்ட சிவமாகிய பழம்பொருளைக் காண்பது அருமையாரும்.

கருத்து:—நன்மையைப் பயக்கும் அநேக நூல்களைக் கற்றாலும் சற்குருவின்றி சர்வ வியாபகப்பொருளை யறிவது அருமையாகும்.

7. நினைப்பு மறப்பு மில்லாதவர் நெஞ்சந்
தனைப்பிரி யாது சிவம்.

உரை:—சிவபெருமானானவர், நினைப்பும், மறப்பும் இல்லாதவர் மனத்தைப் பிரியாது கலந்திருப்பான்.

கருத்து:—இரண்டற்றவர்கள் சிந்தையில் சிவபெருமான் பிரியாது விளங்குவான்.

8. ஒன்றிலொன் றாத மனமுடை யாருடல்
என்றுமொன் றாது சிவம்.

உரை:—ஒப்பற்ற பொருளாகிய சிவபெருமானிடத்தில் பொருந்தாத மனதை யுடையவர்களுடைய சரீரத்தில் சிவபரம் பொருளானது எக்காலத்திலும் பொருந்தாது.

கருத்து:—ஒப்பற்ற பரம்பொருளி னிடத்துப் பொருந்தாத மனமுடையவர்களது சரீரத்தில் என்றும் சிவம் பொருந்தாது.

9. நாட்டமில் லாவிடம் நாட்ட மறிந்தபின்
மீட்டு விடாது சிவம்.

உரை:—எவராலும் உண்மையை யறியப்படாத இடத்தை உண்மையா யுணர்ந்தபின் சிவமயமானது மறுபடியும் திரும்ப விடாது.

கருத்து:—நாம் அவனை யறிந்தால் அவன் நம்மை விடமாட்டான்.

10. பஞ்சமா சத்த மறுப்பவர்க் கல்லாஅல்
அஞ்ச லென்னாது சிவம்.

உரை:—ஐந்து மகா பாதகத்தை ஒழிப்பவர்களுக்கல்லாமல் சிவமயமானது பயப்பட வேண்டாமென்று சொல்லாது.

கருத்து:—பாதகங்களில் நின்றும் விலகினவர்களைச் சிவம் பாதுகாக்கும்.

குருவழி முற்றிற்று.

ஆக செய்யுள் 10.

---

2. அங்கியிற் பஞ்சு

1. அங்கியிற் பஞ்சுபோ லாகாயத் தேநினையில்
சங்கிக்க வேண்டா சிவம்.

உரை:—அக்கினியிற் பட்ட பஞ்சுபோல வெட்ட வெளியைத் தரிசிப்போமானால் சிவபெருமானைப்பற்றி இனி சந்தேகங்கொள்ள வேண்டியதில்லை.

கருத்து:—நினையாமல் நினைவதே சிவமும் மோட்சமு மாகும். அங்கி - அக்கினி. சங்கிக்க - சந்தேகிக்க அல்லது ஐயமுற.

2. மெய்ப்பா லறியாத மூடர்தந் நெஞ்சத்தின்
அப்பால தாகுஞ் சிவம்.

உரை:—உண்மை விஷயத்தை அறியாத மூடர்களு டைய மனதிற்குச் சிவபெருமான் அக்கினியாக இருப் பான்.

கருத்து:—ஞான முடையவர்களிடமே சிவபெருமான் உடன் கலந்திருப்பனாகும்.

3. நெஞ்சகத்து ணோக்கி நினைப்பவர்க் கல்லா
அஞ்சலென் னாது சிவம். [அல்

உரை:—மனதினுள்ளே பார்த்து சிந்திப்பவர்களுக் கல்லாமல் சிவ பழம்பொருளானது பயப்படவேண்டி சொல்லாது.

கருத்து:—உள்நிலையில் யார் சிந்திக்கின்றார்களோ சிவ பெருமான் அவர்களை உண்மையில் காப்பவனாவன்.

4. பற்றிலா தொன் றினைப் பற்றினா லல்லது
கற்றதனா லென்ன பயன்.

உரை:—யாதொரு பற்று மில்லாத ஒரு பொருளைச் சேர்ந்து அடைந்தா லல்லாமல், சகல சாஸ்திரங்களையும் கற் றதினால் என்ன பிரயோஜன முண்டாகும்?

கருத்து:—நூல்களைப் படித்ததின் பயனாவது பற்றில்லாத பரமாத்மாவை அடைதலேயாம்.

விசேஷம்:—ஈண்டு,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்"

என்னும் வள்ளுவர் திருவாக்கோ டொப்பு நோக்குக.

5. தம்மை யறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை யறிவாரோ தான்.

உரை:—தங்களைத்தாமே யறிவாரை தாம் அறிந்துக் கொண்டபின் தம்மைத்தா மறியும் உணர் வுண்டாகுமோ?

கருத்து:—தன்னையுந் தலைவனையும் அறிந்துக்கொண்ட பிறகு மீண்டும் மற்றொன்றையுங் கருதார்.

6. அசபையறிந் துள்ளே யழலெழ நோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு.

உரை:—அசபா மந்திரத்தைத் தெரிந்து மனத்தினுள்ளே அக்கினி யுண்டாவதைக் கண்டால் பிறவி யுண்டாக மாட்டாது.

கருத்து:—அசபா மந்திரத்தை யறிந்து சிவபோகஞ் செய்கிறவர்களுக்கு மறுபிறவி யுண்டாவதில்லை.

7. இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
கமையாத வானந்த மாம்.

உரை:—இமைக்காத பார்வையிலிருந்து அறிகின்றவர்களுக்குப் பொருந்துதற் கருகாமையான ஆனந்த முண்டாகும்.

கருத்து:—இமையாமல் ஓர் நிலையில் தரிசிப்பவர்களுக்கு கிடைப்பதற் கருமையான சிவாநந்த முண்டாகும்.

8. துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு.

உரை:—துரிய ஸ்தானத்திற்கு அப்பால் இருக்கின்ற சுடர்மயப் பிரகாசத்தைத் தரிசித்தால் இறப்பும் பிறப்பும் இல்லையாம். மோட்ச முண்டாகும்.

கருத்து:—சிவசொரூபத்தை உள்ளபடியே தரிசிப்பவர்களுக்குப் பிறப்பிறப்பின்றி மோட்ச முண்டாகும்.

9. மதிபோ லுடம்பினை மாசற நோக்கில்
விதிபோ யகல விடும்.

உரை:—களங்கமற்ற சந்திரனைப்போல உள்ளுடம்பைக் குற்றமறப் பார்த்தால் பிறவி யற்றுப்போம்.

கருத்து:—உள்ளகத்து வெண்மைநிற சிவப்பிரகாசத்தைத் தரிசிக்கப் பட்டவர்களுக்குப் பிரமாவினு லேற்படும் பிறவி அற்றுப்போம். மதி - சந்திரன். விதி - பிரமன். மாசற - குற்ற நீங்க.

10. சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவ நசிக்கும் பரிந்து.

உரை:—ஜீவனைச் சிவலிங்கமாகக் கருதி மனத்துளே தெளிந்தவர்களுடைய ஜென்ம மென்னும் பாவம் அழிந்து போகும்.

கருத்து:—'ஜீவனே சிவன்; சிவனே ஜீவன்' என்று தெளிந்தவர்களுக்கு இனி பிறவி யில்லையாம்.

அங்கியிற் பஞ்சு முற்றிற்று.

ஆக செய்யுள் 20.

---

3. மெய்யகம்

1. மெய்யகத்தி னுள்ளே விளங்குஞ் சுடர்நோக்[கில்
கையகத்தி னெல்லிக் கனி.

உரை:—ஸ்தூல சூக்கும சரீரங்களுக்குள்ளே விளங்குகின்ற பரஞ்சுடரைக்காணில் மோட்சமானது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கிடைக்கக் கூடியதாகும்.

கருத்து:—ஞானதீப பிரகாசத்தை யறிந்தால் மோட்சமென்பது கரதலாமலகம் போலாகும்.

2. கரையற்ற செல்வத்தைக் காணுங்கா லத்தில்
உரையற் றிருப்ப துணர்வு.

உரை:—உணர்வானது எல்லையற்ற செல்வத்தைக் காணுங் காலத்தில் யாதொரு சொல்லு மில்லாம லிருப்பதாகும்.

கருத்து:—உணர்ச்சியானது எல்லையற்ற செல்வப் பொருளாகிய சிவபெருமானைத் தரிசித்தால் வாய் பேசாது மௌன நிலையை யடையக்கூடும். கரை - எல்லை.

3. உண்டு பசிதீர்ந்தாற் போலுடம் பெல்லாநுங்
கண்டுகொள் காதல் மிகும்.

உரை:—உண்டு பசியைத் தீர்த்துக்கொண்டவர்களைப் போல, சரீரத்திற்குள் முழுதும் சிவனைக் கண்டு கொள் வாய்; அப்போது ஆசை யதிகரிக்கும்.

கருத்து:—பசியற்றவர் போன்று உள்ளிருக்கும் சர் வேஸ்வரனை யுணர்ந்தால் சிவயோக இச்சை யதிகரிக்கும்.

4. உரைசெயு மோசை யுரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன்.

உரை:—சொல்லும்படியான நாததத்துவ சப்தத்தைக் கூறப்பட்டவர்களுக்கு நரையும், திரையும், எமனும் உண் டாவதில்லை.

கருத்து:—நாதத்தை உள்ளபடியே யுணர்ந்து சொல் பவருக்கு நரை திரை சாக்காடு இல்லை.

5. தோன்றாத தூயவொளி தோன்றியக் காலுன்
தோன்றாமற் காப்ப தறிவு. [னைத்

உரை:—எவருக்கும் தோன்றப்படாத பரிசுத்தமாகிய பிரகாசம் காணப்பட்டால், உன்னை வெளிப்படுத்தாமல் காப்பது அறிவாகும்.

கருத்து:—உணரக்கூடாத சிவத்தை யுணர்ந்துக்கொண்டால் அவ்வுணர்வுக்குடைய அறிவே யுன்னை பாதுகாக்கும்.

6\. வாக்கு மனமு மிறந்த பொருள்காணில்
ஆக்கைக் கழிவில்லை யாம்.

உரை:—வாக்கு மனம் இல்லாத சிவப்பொருளைக் கண்டால் சரீரத்திற்கு யாதொரு அழிவும் உண்டாவ தில்லையாகும்.

கருத்து:—வாக்கு மனம் இறந்த பொருளாகிய சிவத்தைக் கண்டால் உடல் நிலைபெற்றிருக்கும்.

7\. கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற வொளி.

உரை:—உன்னுடைய சரீரத்தின் கண்ணே எழுந்தருளியிருக்கின்ற சிவமயப் பொருளானது நோக்குமிடத்து ஞானவிழியி னின்றிருந்து ஆனந்தத்தை யுண்டாக்கும்.

கருத்து:—உள்ளகத்தே இருக்கும் சிவப்பொருளைத் தரிசித்தால் ஆனந்தத்தை யுண்டாக்கும்.

8\. ஆனந்த மான வருளை யறிந்தபின்
தானந்த மாகு மவர்க்கு.

உரை:—ஆனந்தத்தைத் தரும்படியான திருவருளைத் தெளிந்த பிறகு அந்த அருளை அறிந்தவர்க்குத் தானே அந்தமாக முடியும்.

கருத்து:—திரு அருளாகிய ஆனந்தத்தைத் தெளிந்தவர்கள் ஆனந்த ரூபத்தை யடைவார்கள்.

9. மறவாமற் காணும் வகையுணர் வாருக்
இறவா திருக்கலு மாம்.

உரை:—மறவாமல் தரிசிக்கும் வகையைத் தெரிந்தவர்க்குச் சாகாமல் இருக்கும்படியான சக்தி உண்டாகும்.

கருத்து:—தேஜோமயப் பொருளாகிய சிவத்தை மறவாமல் இருக்கும் இயல்புடையவர்கள் பிறவி யெடுக்க மாட்டார்கள்.

10. விண்ணிறைந்து நின்ற பொருளே யுடம்பதன்
உண்ணிறைந்து நின்ற வொளி.

உரை:—ஆகாயம் வரையில் வியாபித்த பொருளே சரீரமாம். அச்சரீரத்தினுள் வியாபித்திருக்கின்றது வொளி.

கருத்து:—சரீரமே ஆகாய மாகவும், அதனுள் அடங்கியிருக்கும் சர்வ பொருள்களிலும் தேஜோரூப முடையவன் கலந்திருப்பான்.

மெய்யகம் முற்றிற்று.

ஆக செய்யுள் 30.

---

4. கண்ணடி

1. கண்ணடி தன்னி லொளிபோ லுடம்பதனுள்
உண்ணடி நின்ற வொளி.

உரை:—கண்ணுடியில் தோன்றும் ஒளியைப்போல் சரீரத்திற்குள் தேஜோமயமாகிய சிவம் ஒளித்துக்கொண்டிருக்கிறது.

கருத்து:—கண்ணுடியில் ஒளியிருப்பதுபோல சரீரத்திற்கும் கடவுளாகிய ஒளி யிருக்கின்றது.

2. அஞ்சு புலனின் வழியறிந் தாற்பின்னைத்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

உரை:—பஞ்சேந்திரியங்களின் விதிகளை அறிந்த பிறகு உடம்பு சாகாது.

கருத்து:—புலன்களின் குணுகுணங்களை உணர்ந்தால் சரீரம் இறப்பதில்லை.

3. நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு.

உரை:—உந்தி கமலத்தினிடமாக நன்மையை யடைய தபசிருக்கில் சரீரமானது சாவதில்லை.

கருத்து:—உந்தியின் குணுகுணங்களை உள்ளவாறே அறிந்தால் சரீரம் சாவதில்லை.

4. கண்டத் தளவிற் கடிய வொளிகாணில்
அண்டத்த ராகு முடம்பு.

உரை:—கண்டத்தினிடமாக பொருந்திய பிரகாசத்தைக் காணில் அவர்கள் சரீரமானது தேவ சரீரமாகும்.

கருத்து:—விசுத்தி ஸ்தானத்தினிடமாக பொருந்திய பிரகாசத்தைக் கண்டவர்கள் சரீரம் தேவ சரீரமாகும்.

5. சந்திர னுள்ளே தழலுற நோக்கினல்
சுந்தர மாகு முடம்பு.

உரை:—சந்திர மண்டலத்தினுள்ளே அக்கினி பொருந்த தரிசிக்கில் சரீரமானது சூட்சும ரூபத்தை யடையும்.

கருத்து:—சந்திர மண்டலத்தில் சிவத்தைக் கண்டால் தேகம் சூட்சுமமாகும்.

விசேஷம்:—'சுந்தர மாகு முடம்பு' என்பதை சரீரம் அழகாக விளங்கும் என்ப. சுந்தரம் - அழகு.

6. ஆர்க்குந் தெரியா வுருவந் தனைநோக்கில்
பார்க்கும் பரமா மவன்.

உரை:—யாவருக்கும் எளிதிற் காணுதற்கரிய சிவத்தை நோக்கினல் பரம்பொருளாகிய சிவமாவான்.

கருத்து:—காணுதற்கரிய சிவத்தைத் தரிசித்தவன் தேஜோ சொரூபத்தை யடைவான்.

7. வண்ணமில் லாத வடிவை யறிந்தபின்
விண்ணவ ராகு முடம்பு.

உரை:—அழகு இல்லாத வடிவத்தையுடைய சிவத்தை அறிந்தபின் சரீரமானது தேவ சரீரமாகும்.

கருத்து:—அழகில்லாத ரூபமுடைய சிவனைத் தரிசித்தால் சரீரம் தேவ சரீரமாகும்.

8. நெற்றிக்கு நேரே நிறைந்த வொளிகாணில்
முற்று மழியா துடம்பு.

உரை:—சுழி முனைக்கு முன்னே வியாபித்திருக்கும் சிவனைக் காணில் சரீரம் அழிவு படாது.

கருத்து:—நெற்றிக்கு நேரே வியாபித்திருக்கின்ற தேஜோமயமான சிவனைத் தரிசிப்பவர்கள் திரேகமானது என்றைக்கு மழியாது.

9. மாதூ வெளியின் மனமொன்ற வைத்தபின்
போதக மாகு முடம்பு.

உரை:—தூய்மையான ஆகாயத்தின்கண் மனதைப் பொருந்த வைத்தபிறகு சரீரமானது ஞானமயத்தை யடையும்.

கருத்து:—பரிசுத்தமான வெளியில் மனதை உள்ள படியே நிருத்தினால் சரீரம் ஞானநிலையை யடையும்.

10. சுத்தமோ டொன்றி மனமு மிறந்தக்கால்
முற்று மழியா துடம்பு.

உரை:—மனமானது பரிசுத்தமான தத்துவத்தில் கலந்து சகலத்தையும் துறக்குமானால் சரீரம் எப்போதும் அழியாத நிலையை யடையும்.

கருத்து:—மனமானது யாவற்றையும் நீக்கி சுத்தமாகிய தத்துவத்தில் கலந்தால் சரீரம் என்றும் அழியாது.

கண்ணாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 40.

5. சூனியகால மறிதல்

1. நிரவி யழலுருவாய் நீண்ட வெளிகாணில்
அரவணையா ளுகு மூடம்பு.

உரை:—நிறைந்து அக்கினி சொரூபமாய் வியாபித்திருக்கும் ஆகாயத்தைத் தரிசித்தால் சரீரமானது மஹா விஷ்ணுவின் சொரூபத்தை யடையும்.

கருத்து:—சிவத்தைச் சிற்றம்பல வெளியில் தரிசித்தால் சரீரம் விஷ்ணு சொரூபமாகும்.

2. உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார்.

உரை:—புருவத்தின் மத்தியமாகிய சுழிமுனையிலிருந்து அக்கினி சொரூபமாக மனதின்கண்ணே சென்று சர்வேஸ்வரனைக் காண்.

கருத்து:—தன்னை அக்கினி சொரூபமாக்கிச் சுழிமுனையிலிருந்து சிவத்தைத் தரிசித்தல் வேண்டும்.

3. புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு மூடம்பு.

உரை:—சுழி முனையிலிருந்து சிவத்தைத் தரிசிக்கில் சரீரம் சூட்சுமமாகும்.

கருத்து:—புருவத்திடையிலிருக்கும் சுழிமுனையிலிருந்து சிவத்தைத் தரிசித்தால் சரீரமானது சூட்சும சரீரமாகும்.

4. அகம்புறம் பேராப் பொருளை யறியில்
உகம்பல காட்டு முடம்பு.

உரை:—உள்ளும் வெளியிலும் மாறுதப் பொருளாகிய சிவத்தைத் தரிசித்தால் சரீரமானது அநேககால மிருக்கும்.

கருத்து:—உள்ளும் வெளியிலும் வியாபித்திருக்கும் சிவத்தைத் தரிசித்தால் சரீரம் அநேககாலம் நீடித்திருக்கும்.

5. ஆவிபாழ் போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு.

உரை:—சரங்களை வெளியே விட்டுப் பாழாக்காமல் அடக்கிக் காத்துக்கொண்டால் சரீரம் அசைவற்றிருக்கும்.

கருத்து:—சரத்தை வெளியே விடாது உள்ளே அடக்கினல் சரீரம் ஞானத்தை யடையும்.

6. அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

உரை:—ஐந்து புலன்களை அடக்கி ஞானத்துட னிருந்தால் சரீரம் சாவதில்லை.

கருத்து:—ஐம்புலனை ஒடுக்கித் தன் வயப்படுத்தினல் சரீரம் மரண மில்லாததாகும்.

7. தீயாக வுள்ளே தெளிவுற நோக்கினல்
மாயாது பின்னை யுடம்பு.

உரை:—அக்கினி சொரூபமாக மனத்தின்கண்ணே தெளிவுபெற ஞானத்தைத் தரிசித்தால் சரீரமானது பிறகு சாவாது.

கருத்து:—உள் முகத்தில் சிவத்தைத் தரிசித்தால் சரீரம் சாகாது.

8. தானந்த மின்றித் தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு.

உரை:—தான் முடிவில்லாமல் அக்கினியை பொருந்தத் தரிசித்தால் சரீரம் ஆனந்தமாகிய மோட்சத்தை யடையும்.

கருத்து:—முடிவில்லாத பொருளைத் தரிசித்தால் சரீரம் பேரின்பத்தை யடையும்.

9. ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில்
அழிவின்றி நிற்கு முடம்பு.

உரை:—எங்கும் நீங்காமல் வியாபித்திருக்கும் சிவத்தைத் தரிசித்தால் சரீரமானது அழிவில்லாம லிருக்கும்.

கருத்து:—எங்கும் வியாபித்திருக்கும் சிவத்தைத் தரிசித்தால் சரீரம் அழியாது.

10. பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு.

உரை:—யாதினும் ஆசையற்ற சிவத்தை நினைந்தால் சரீரம் முழுதும் கெடாது.

கருத்து:—பற்றற்ற சிவத்தை நினைக்கில் சரீரம் முழுதும் கெடாது.

விசேஷம்:—விருப்பும் வெறுப்பும் அற்ற சிவத்தை நினைப்போர் உலகப் பற்றை யகற்றல் வேண்டும். உலகப் பற்றுடையாருக்குச் சிந்தித்த பொருள் கைகூடா தென்க.

சூனியகால மறிதல் முற்றிற்று.

ஆக செய்யுள் 50.

---

6. சிவயோக நிலை

1. அடிமிசை வாயு வடுத்தடுத் தேகி
முடிமிசை யோடி முயல்.

உரை:—மூலாதாரத்தில் காற்றென்னும் சரமானது அடுத்து அடுத்துப்போய் சுழிமுனை ஸ்தானத்தின் கண்ணே பிரயத்தனப்படு.

கருத்து:—சரீரத்தோடு கூடவே சம்பந்தப்பட்டு சுழிமுனை ஸ்தானத்திற் செல்லுதற்கு முயலவேண்டும்.

2. உண்ணடி வாயு வதனை யுடனிரப்பி
விண்ணோடு மெள்ள விடு.

உரை:—உள்ளகத்திலுள்ள காற்றைச் சரீரத்திற்குள் பூரிக்கும் பக்ஷத்தில் மெதுவாக வெளியே விடுக.

கருத்து:—சரீரத்தினுள்ளே இயங்கும் சுவாசத்தை உள்ளே நிரப்பி கும்பித்து வெளியே மெதுவாய் விடுக.

3. மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்து
கொள்ளுமின் கும்பங் குறித்து.

உரை:—மெதுவாக இரேசகஞ்செய்து சரீரம் விம்முதலடைய உள்ளே பூரகஞ்செய்து அளவுடன் கும்பகஞ்செய்க.

கருத்து:—சரத்தை இரேசகத்திலும் பூரகத்திலும் கிரமப்படி மெதுவாக செய்து கும்பகங்கொள்ள வேண்டும்.

4. இரேசக முப்பத் திரண்டது மாத்திரை
பூரகம்பத் தாறு புகும்.

உரை:—இரேசகத்தினுடைய மாத்திரையளவு முப்பத்திரண்டும், பூரகத்தினுடைய மாத்திரை பதினாறும் புகும்.

கருத்து:—இரேசகத்திற்கு மாத்திரை முப்பத்திரண்டும், பூரகத்திற்கு மாத்திரை பதினாறுமாகும்.

5. கும்பக நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான்.

உரை:—கும்பகத்திற்கு மாத்திரை அறுபத்தினாலாக ஸ்தம்பிக்க வேண்டும்.

கருத்து:—கும்பகத்திற்கு மாத்திரை அறுபத்தினாலாகும்.

இரேசகம்:—முப்பத்திரண்டு மாத்திரை.

பூரகம்:—பதினாறு மாத்திரை.

கும்பகம்:—அறுத்தினாலு மாத்திரை பிரமாணம்.

6. முன்னமி ரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

உரை:—முதல் இரேசகத்தையும், இரண்டாவது பூரசத்தையும், மூன்றுவது கும்பகத்தையும் கிரமப்படி செய்ய வேண்டும்.

கருத்து:—சரீரத்தின் சாதகம் கிரமப்படியே செய்ய வேண்டும். இன்றேல் பல துன்பமுறும்.

7. ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியுஞ்
சேருமின் வாயுச் செயல்.

உரை:—தசநாடிகளையும், எழுபத்தீராயிர நாடிகளையும் வாயுவோடு சேருங்கள்.

கருத்து:—உரிய நாடிகளை வாயுவுடன் சேர்க்க வேண்டும்.

8. வாசலீ ரைந்து மயங்கிய வாயுவை
யீசன்றன் வாசலி லேற்று.

உரை:—தசவாசல்களிலும் மயங்கி யிருக்கும் வாயுவைச் சிவப்பொருள் எழுந்தருளி யிருக்கும் வாயலில் செலுத்துவாயாக.

கருத்து:—பத்து வழிகளிலும் சஞ்சரிக்கும் பிராணவாயுவைச் சுழிமுனை வழியில் செலுத்துவாயாக.

9. தயாவினில் வாயு வலத்தி லியங்கில்
தியான சமாதிகள் செய்.

உரை:—தயவுடன் வாயு வலது பக்கத்தில் சஞ்சரிக்குமானல் தியானமும் சமாதியுஞ் செய்க.

கருத்து:—வாயுவானது சூரிய கலையில் சஞ்சரிக்கும்போது தியான சமாதி முதலியவைகளைச் செய்யவேண்டும்.

10. ஆதியா மூல மறிந்தஞ் செழுத்தின்
பேதியா தோது பினே.

உரை:—அப்பால் முதன்மையாகிய காரணத்தைத் தெரிந்து பஞ்சாட்சரத்தைப் பிறரறியாது ஓதல் வேண்டும்.

கருத்து:—பிறகு மூலப்பொருளை யறிந்து பஞ்சாட்சர தியானம் செய்யவேண்டும்.

விசேஷம்:—'பேதியாதோது' என்றது பிறர் அறியாது மௌனத்தில் சிந்திக்க வேண்டும். இஃதன்றியும், 'பேதியாதோது' என்பதற்குப் பஞ்சாட்சரமாகிய மந்திர வாக்கியம் கெடாமல் சொல்ல வேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்.

சிவயோகநிலை முற்றிற்று.

ஆக செய்யுள் 60.

---

7. ஞானநிலை

1. தற்புருட மாமுகந் தன்னிற் றனியிருந்
துற்பன மஞ்சை யுரை.

உரை:—தற்புருடமான உயர்வாகிய இடத்தில் தனியே யிருந்து மேலாகிய பஞ்சாட்சரத்தைத் தியானஞ் செய்வாயாக.

கருத்து:—தனியே தற்புருஷ முகத்தில் பஞ்சாட்சர சிந்தனை செய்யவேண்டும்.

விசேஷம்:—தியானஞ் செய்வதற்குத் தனித்த விடமே சாலச் சிறந்ததாம். தனித்த விடத்திலிருந்து தியானஞ் செய்தால் மனம் ஒரு நிலைப்படும். மனம் ஒரு நிலைப்பட தியானத்தின் பிரயோசனங் கைகூடும். இதனை, 'காடு மலையுங் கருதித் தவஞ் செய்தால், கூடும் உணர்வின் பயன்' என்று முன்னும் கூறினர். அன்றியும் மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகளும், "........கண்மூடி மௌனியாகித் தனியே இருப்பதற் கெண்ணினேன்........" என்றருளியதும் ஈண்டு ஆராயத் தக்கதாம்.

2. தற்புருட மாமுகமேற் றாரகைதன் மேலே
நிற்பது பேரொளி நில்.

உரை:—தற்புருட முகத்தின்மே லிருக்கும் நட்சத்திரத் தின்மேலே இருக்கப்பட்டது பேரொளியாகும். அவ்விடத்தில் நிற்பாயாக.

கருத்து:—தற்புருட முகத்திற்கு மேலாய் நட்சத்திரத் தின்மேலே யிருக்கும் பெரிய பிரகாசத்தில் அறிவை நிறுத்துவாயாக.

3. ஓதிய தற்புரு டத்தடி யொவ்வவே
பேதியா தோது பினை.

உரை:—சொல்லும்படியான தற்புருட முகத்தடியின் கண் ஒப்புடன் பிறகு மனவித்தியாச மின்றி தோத்திரம் செய்க.

கருத்து:—மனவித்தியாச மில்லாமல் தியானம் செய்க.

4. கொழுந்துறு வன்னி கொழுவுற வொவ்வில்
எழுந்தா ரகையா மிது.

உரை:—கொழுந்து விட்டுப் பிரகாசிக்கும் அக்கினிச் சுடரானது செம்மையாக சம்பந்தப்பட்டால் இது உண்டாகும் நட்சத்திரப் பிரகாசமாகும்.

கருத்து:—அக்கினிச் சுடரானது செம்மைப்பட்டால் நட்சத்திர பிரகாசமாகும்.

5. மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே
குறித்துக் கொளுஞ்சீயைக் கூட்டு.

உரை:—தடுத்து கொளுத்துகின்ற அக்கினி நடுவே யாவற்றையுங் குறிக்கும்படியான சிகாரத்தைச் சேர்ப்பாயாக.

கருத்து:—அக்கினி பிரகாசத்தில் மனதைச் சேர்க்க வேண்டும்.

6. காலுந் தலையு மறிந்து கலந்திடில்
சாலவு நல்லது தான்.

உரை:—காலையுந் தலையையுந் தெரிந்து கலந்துக்கொண்டால் மிகவும் நல்லதாகும்.

கருத்து:—அங்கு காலும் தலையும் அறிய வேண்டும்.

7. பொன்னோடு வெள்ளி யிரண்டும் பொருந்திடி
அன்னவன் றானது வே யாம். [ல்

உரை:—சூரியகலை சந்திரகலை இரண்டும் சேர்ந்தால் உண்டாகும் சுழிமுனையே இறைவன் திருவடியாகும்.

கருத்து:—சுழிமுனையே சிவபெருமானாகும்.

8. நின்ற வெழுத்துட னில்லா வெழுத்தினை
யொன்றுவிக்கி லொன்றே யுள.

உரை:—நிற்கும் எழுத்துடனே நிற்காத எழுத்தை ஒன்றாகப் பொருந்தச் சேர்த்தால் உள்ளது ஒரு பொருளே யாகும்.

கருத்து:—இரண்டும் சேர்ந்தால் ஒன்றே யாகும்.

9. பேசா வெழுத்துடன் பேசு மெழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம்.

உரை:—மௌனாட்சரத்துடனே பேசு மட்சரஞ் சேர்ந்தால் அறிவெனுங் குருவானவன் சர்வேஸ்வரனாவான்.

கருத்து:—அறிவும் சிவமும் சேர்ந்தால் அதுவே குருவும் கடவுளுமாகும்.

10. அழியா வுயிரை யவனுடன் வைக்கில்
பழியான தொன்றில்லை பார்.

உரை:—நிலையான ஆன்மாவைப் பரமேஸ்வரனிடத்திலே சேர்த்து வைத்தால் யாதொரு பழியும் வருவதில்லை; அதனை யுணர்வாயாக.

கருத்து:—இரண்டும் ஒன்றாகினால் இனி எப்பிறவியும் உண்டாவதில்லை.

ஞானநிலை முற்றிற்று.

ஆக செய்யுள் 70.

---

8. ஞானம் பிரியாமை

1. பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்
இறந்திடம் வன்னி யிடம்.

உரை:—பிறந்த இடமாவது உந்தியாகும். நீங்கா திருக்குமாயின் இறந்த இடமானது அக்கினி யிடமாகும்.

கருத்து:—பிறந்த விடம் உந்தியும், இறந்த விடம் அக்கினியு மாகும்.

2. சாகா திருந்த தலமே மவுனமது
ஏகாந்த மாக விரு.

உரை:—சாகாமல் இருந்த விடமே மவுனமாகும். அதே இடமாகக் கொண்டிருப்பாயாக.

கருத்து:—நிலைபெற்ற ஏகாந்த பீடத்தி லிருப்பாயாக.

விசேஷம்:—மௌனத்திற்கு ஏகாந்தமே இனிதாகும். இதனை, "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்றுப் பிறவிடத்துங் கூறினர் ஔவையார்.

3. வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியி லொளியா யுறும்.

உரை:—ஆகாயத்தி லுற்பவமாகிய விளைவின் பழம் பொருளே பிரகாசத்தி லுண்டான பிரகாசமாகும்.

கருத்து:—வெளிச்சத்தி லுண்டாகும் பிரகாசமே சிவமாகும்.

4. மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா ரிறவார் பினை.

உரை:—மறதி நினைவு இல்லாமல் மௌன ஞானத்திலிருந்தால் பிறகு பிறக்கவும் இறக்கவு மாட்டார்கள்.

கருத்து:—மறதி நினைவு அற்றால் பிறப்பு இறப்பு அறும்.

5. குருவாம் பரனடி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு.

உரை:—குருவாகிய பரமேஸ்வரச் சேர்க்கையை நினைத்து அங்கு இரண்டு வேளையும் பிரியாம லிருக்கவேண்டும்.

கருத்து:—இருபோதும் சரத்தை அப்பியாசிக்க வேண்டும்.

6. சுந்தரச் சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

உரை:—அழகுடைய பிரகாசமானது விளங்குகின்ற இடமே மந்திரமும் சக்கரமுமாகும்,

கருத்து:—மந்திரமும் யந்திரமும் பரஞ்சோதியே யாகும்.

7. தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது
பாராப் பராபரம் பார்.

உரை:—பார்க்கக்கூடிய பரம்பொருளானது தூராதி தூரத்தி லிருக்கும். அதைச் சொல்லுவதற்கியலாது. நீ யறிவாயாக.

கருத்து:—பார்ப்பதற்கும் சொல்லுதற்கும் தூரமான பரம்பொருளை உள்ளே யறிவாயாக.

8. ஈரொளி யீதென் றிறைவ னுரைத்தனன்
நீரொளி மீது நிலை.

உரை:—இது இரண்டு பிரகாசமென இறைவன் சொன்னான். அவ்விரண்டொளிமேலே உயர் நிலையாகும்.

கருத்து:—சந்திர சூரியனுக்குமேல் உள்ள சுழிமுனையே உயர்ந்த நிலையாகும்.

9. அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர்.

உரை:—ஆதியந்த மில்லாத பொருளே அழகிய ஞானப் பிரகாசமாகும்.

கருத்து:—ஞான வொளியானது ஆதியந்த மில்லாதது.

விசேஷம்:—ஞானமே வடிவமாகக்கொண்டு பிரகாசிக்கின்ற சிவபெருமான் ஆதியும் அந்தமு மில்லாதவனும்,

இதனை, "ஆதிகுண மொன்றுமில்லா னந்தமிலான் வரக் கூவாய்" என்றருளிய மாணிக்க வாசகர் திருவாக்கா னறியலாம்.

10. இதுமுத்தி சாதனமென் றேட்டில் வரைந்து
பதிவைத் தனன்குரு பார்.

உரை:—இதுவே மோட்ச வழியென்று ஏட்டிலெழுதி மனதில் பதிய வைத்தவன் ஞானசிரியனாகும். (இதனை நீ) அறிவாயாக.

கருத்து:—இதுவே மோட்ச சாதனமென்று அமைத்த வன் குருவாகும்.

ஞானம் பிரியாமை முற்றிற்று.

ஆக செய்யுள் 80.

---

9. மெய்ந்நெறி

1. செல்லல் நிகழல் வருகால மூன்றினையுஞ்
சொல்லு மவுனத் தொழில்.

உரை:—மவுன ஞானத்தின் பயனாவது சென்ற காலம் நடக்கும் காலம் வருங்கால மூன்றினையும் சொல்லுதலாம்.

கருத்து:—மவுன ஞான மடைந்தால் மூன்று காலத்தை யும் சொல்லலாம்.

2. பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர்.

உரை:—பஞ்சியிலக்கப்பட்ட அக்கினியைப்போல் எங்கும் வியாபித்திருந்து ஞானப்பிரகாசமானது உறங்காது.

கருத்து:—ஞான வொளியானது பஞ்சிற்பட்ட அக்கினியைப்போல் வியாபித்திருக்குமே யன்றி உறங்காது.

3. இமைப்பிற் பரந்தங் கொடுங்குமின் போல
நமக்குட் சிவன்செயல் நாடு.

உரை:—இமைநேரத்தில் பரவி அப்போதே ஒடுங்கும் மின்னலைப்போல, நமக்குள்ளே சிவபிரானது செயலை விரும்பு.

கருத்து:—மின்னலைப்போலத் தோன்றி மறையும் சிவபிரானது செயலை விரும்புக.

4. குவித்து மனத்தைக் குவித்துள்ளே யோங்கி
செவித்துப் பெறுவ தெவன். [ல்

உரை:—மனதை ஒடுக்கி உள்ளே குவித்து உயர்ந்தால் ஜெபித்து அடைவது என்ன?

கருத்து:—மனஞ் செம்மைப்பட்டால் மந்திரஞ் செபிப்பதால் என்ன பிரயோஜனம்?

5. காலுந் தலையு மொன்ருகக் கலந்திடம்
நாலா நிலையென நாடு.

உரை:—காலும் தலையும் ஒன்ருகக்கலந்த இடம் அதுவே நாபிக்கமலம் என்றுக்கொள்க.

6. மூல நிலமிசை மூன்று நிலத்தினில்
ஆல மருந்துஞ் சிவம்.

உரை:—மூலாதாரத்தின் மூன்று மிடத்தில் சிவபெருமானனவர் எழுந்தருளி யிருப்பார்.

7. எழுஞ்சுட ருச்சியின் மேல்மனம் வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர்.

உரை:—எழும்பும் பிரகாசத்தையுள்ள உச்சியின்மேல் மனதை நாட்டினால் தொழிலொன்று மில்லாத பிரகாசமாகும்.

8. அடைத்திட்ட வாசலின் மேல்மனம் வைத்துப்
படைத்தவன் றன்னையே பார்.

உரை:—கதவை யடைத்திருக்கும் வாசலின்மேல் மனதை நாட்டி சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளைப் பார்ப்பாயாக.

9. அறுபதொ டாறு வருட மிதனை
உறுதிய தாக வுணர்.

உரை:—அறுபத்தாறு வருஷம் வரைக்கும் இதனை உறுதியாக ஆராய்ந்து தெளிக.

10. அட்டமா சித்தி அடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி.

உரை:—ஒரு வருஷத்தில் அஷ்டமா சித்திகள் உண்டாகும். இஷ்டமாக இதனைத் தெரிந்துக்கொள்வா யாக.

கருத்து:—ஒருவருடத்தில் அஷ்டமா சித்தி கைகூடுமாதலின், நீ இதனை விரும்பி யறிந்துகொள்க.

விசேஷம்:—அஷ்டமா சித்தி யென்பது எட்டுவித யோக சித்திகளாகும். அஷ்டம் - எட்டு. அவ் வெட்டாவன: "அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்" என்பனவாம். இதனிலக்கணம்: ஆன்மாபோலாதல் அணிமா, மகத்துவமாதல் மகிமா, தன்னுடற் கண்டிப் பின்றாய்க் கண்டிப் புள்ள வற்றை யுருவுள்ளவனாதல் கரிமா, வேண்டுவன அடைதலே பிராத்தி, நிறையுளனாதலே பிரகாமியம், ஆட்சி யுள்ளனாதலே ஈசத்துவம், எல்லாந் தன் வசம் ஆக்க வல்லவனாதலே வசித்துவம்.

மெய்ந்நெறி முற்றிற்று.
ஆக செய்யுள் 90.

---

10. துரியதரிசனம்

1. வன்னிய தெட்டு மதியம் பதினாறு
முன்னிய பன்னிரண்டு முள்.

உரை:—சூரியன் எட்டும், சந்திரன் பதினாறும், நினைத்த பன்னிரண்டும் உள்ளே அடக்க வேண்டும்

குறிப்பு:—வன்னி - சூரியன். மதியம் - சந்திரன். முன்னிய - நினைத்த அல்லது எண்ணிய.

2. சூரியன் வன்னியோன் றாகிடிற் சோமனும்
பாரு மினிது பயன்.

உரை:—சூரியனும் அக்கினியும் ஒன்ருனல் சந்திரனுகும். நீ இந்தப் பிரயோசனத்தை அறிய வேண்டும்.

குறிப்பு:—சோமன் - சந்திரன்.

3. மதியொடு வன்னியொன் ருகவே வந்தால்
கதிரவ னமென்று காண்.

உரை:—சந்திரனுடன் அக்கினியும் ஒன்ருகச் சேர்ந்தால் சூரியனுகு மென்றும் அறிவாயாக.

குறிப்பு:—கதிரவன் - சூரியன்.

4. மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல்.

உரை:—சந்திரனுக்குள்ளே சூரியன் வந்து ஒடுங்கினல் அது பௌர்ணமி யெனும் பெயராக உண்டாகும்.

குறிப்பு:—பூரணை - பௌர்ணமி.

5. தோற்றுங் கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மமாவாசை தான்.

உரை:—காணக்கூடிய சூரியன் சந்திரனேடு இயங்கினல் சொல்லும்படியான அமாவாசையாகும்.

6. வன்னி கதிரவன் கூடிடி லத்தகை
பின்னிவை யாகு மெலாம்.

உரை:—அத்தகைய அக்கினியும் சூரியனுங் கூடிடில் பிறகு இவைகளே யெல்லா மாகும்.

7. அமாவாசை பூரணை யாகு மவர்க்குச்
சமனு முயிருடம்பு தான்.

உரை:—அமாவாசையே பௌர்ணமியாக கொள்ளு பவருக்கு உயிரு முடம்பும் சமானமாகும்.

8. அண்டத் திலுமிந்த வாறென் றறிந்திடு
பிண்டத் திலுமதுவே பேசு.

உரை:—வெளியண்டத்தில் இந்த தன்மையென்று அறிவதோடு, உள் அண்டத்திலும் அப்படியே யாகு மென்று சொல்லுக.

விசேஷம்:—"அண்டலட்சணம் பிண்டத்திலாம்" என்பது பழமொழி.

9. ஏறு மதிய மிறங்கிடி லுறங்கிடும்
கூறுமப் பூரணை கொள்.

உரை:—ஏறும்படியான சந்திரகலை இறங்கினால் உறங்கும். அப்போது அப்பௌர்ணமியை உட்கொள்ளுக.

10. உதிக்கு மதியமுங் கண்டங் குறங்கில்
மதிக்கு மமாவாசை யாம்.

உரை:—உதயமாகும் சந்திரனைக் கண்டு உறங்கினால் அதுவே நினைக்கும் அமாவாசையாகும்.

துரியதரிசனம் முற்றிற்று.

ஆக செய்யுள் 100.

11. உயர்ஞான தரிசனம்

1. கொண்டிடு மண்டல மூன்றங்கி தன்னையிப்
பிண்டமு மூழிபிரி யா.

உரை:—எவராலுங் கொள்ளப்பட்ட சோம சூரியாக்கினி மண்டலங்களுள் அக்கினி மண்டலத்தைப் பிண்டத்திலும் ஊழியிலும் பிரிய மாட்டாது.

குறிப்பு:—மூன்று + அங்கி = மூன்றங்கி என்றாயிற்று. அங்கி - அக்கினி. இது சூரியன், சந்திரன், அக்கினி மூன்றினையும் குறிப்பது. இதனை 'சோம சூரியாக்கினி' என்று உரையில் கூறப்பட்டது.

2. வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
தள்ளுமின் கால சரம்.

உரை:—காலமோடு நடக்கும் சரத்தை வெள்ளி, புதன், திங்கட்கிழமைகளில் சந்திர கலையில் நடைபெறச் செய்யவேண்டும்.

3. செவ்வாய் சனிஞா யிறுவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடரு மில்.

உரை:—செவ்வாய், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கால சரத்தைச் சூரிய கலையில் நடைபெறச் செய்யில் துன்ப மில்லை.

4. வளர்பொன் னிடம்பிறைத் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி.

உரை:—வளர்பிறை வியாழக்கிழமையில் இடது நாசியிலும், தேய்பிறை வியாழக்கிழமையில் வலது நாசியிலும் சரம் செல்லும்.

5. வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்துபே ராது செயல்.

உரை:—சனிக்கிழமை இரவு பகலும் வாயுவை வலது நாசியில் செலுத்துவாய். இதுவே யதன் இயக்கை.

6. இயங்கும் பகல்வல மிராவிடம் வாயு
தயங்குறல் நாடிக்குட் டான்.

உரை:—வாயுவானது விளங்கும்படியான நாடிக்குள் பகலில் வலமாகவும், இரவில் இடமாகவும் நடக்கும்.

7. அரசறி யாம லவன்பே ருரைத்து
தரைதனை யாண்ட சமன்.

உரை:—அறிவானந்தத்தை யறியாமல் அவன் பெயரை மாத்திரம் கூறிடில், தரையை ஆண்டதற்குச் சமானமாகும்.

8. கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லாத தென்ன செயல்.

உரை:—உள்ளதை யுணராத மூடர்கள் திருவுருவத்தை யடைய முடியாதது. இது என்ன செயலாகும்.

கருத்து:—அறிவு நூல்களை யுணராத அறிவிலிகள் கடவுள் நிலையை யடைய முடியாது.

9. திருவருட் பாலைத் தெரிந்து தெளியில்
குருவிருப் பாமென்று கொள்.

உரை:—திருவருள் என்னும் அமிர்தத்தை அறிந்து தெளிவடைந்தால் அதுவே ஞானசாரியனுடைய பீடமென்று கொள்ளுவாய்.

10. கற்கிலுங் கேட்கிலும் ஞானக் கருத்துற
நிற்கிற் பரமவை வீடு.

உரை:—சாஸ்திரங்களைக் கற்றாலும், கேட்டாலும், ஞானவழியிலிருந்தால் பரம் பொருள் விளங்கும். மோட்சமுங் கிடைக்கும்.

கருத்து:—ஞான மார்க்கத்தைக் கற்று கேட்டு அது வழியே இருந்தால் மோட்சம் கைகூடும்.

உயர்ஞான தரிசனம் முற்றிற்று.

ஆக செய்யுள் 110.

மூன்றவது தன்பால் முற்றிற்று.

ஆக பால் 3-க்குச் செய்யுள் 310.

ஔவைக்குறள் மூலமும்
ஞானதீபார்த்த உரையும்
முற்றுப் பெற்றன.

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை:—1940.